விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 311 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 09 புதன்கிழமை (26.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
வட்டுமே

## யாழில் தென்பட்ட சூரியகிரகணம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் சூரிய கிரகணம் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5.27 மணி முதல் மாலை 6.30 மணிவரையில் தென்பட்டுள்ளது.
யாழில் கடந்த 15

வவுனியாவில் போதை மருந்து கொள்வனவு

## தனியார் வைத்திய நிலையம், வைத்தியருக்கு எதிராக விசாரணை

சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை

(வவுனியா)
வவுனியாவில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்ததாக கூறப்படும் தனியார் வைத்தியசாலை மற்றும் வைத்தியர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் எம்.மகேந்திரன் தெரிவித்தார்.
வவுனியாவிலும் போதை மாத்திரைகள் தனியார் வைத்தியசாலை ஒன்றின் பெயரில் அரச வைத்தியர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்று ஊடகவிய 15

வடக்கு, கிழக்கில் முப்படையினரை பயன்படுத்தி

# அரசாங்கம் திட்டமிட்டு போதையை பரப்புகின்றது



சிறீதரன் எம்.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)
**வடக்கு - கிழக்கு இளைஞர், யுவதிகள் மீது முப்படையினரைப் பயன்படுத்தி அரசு திட்டமிட்டு போதைப்பொருளைப் பரப்புவதாக சிறீதரன் எம்.பி குற்றம் சுமத்தியுள்ளார்.**

வடக்கு-கிழக்கில் போதைவஸ்து பயன்பாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே சிறீதரன் எம்.பி. இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், போதைவஸ்து பயன்பாடு பொலிஸ், இராணுவம், கடற்படை இவர்களுடைய கைகளில் தான் இதனுடைய நாணயக் கயிறுகள் 16

பொங்கலுக்கு மேலும் சில

## அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்



ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக மனோ எம்.பி தெரிவிப்பு

07ஆம் பக்கம் பார்க்க

## சீரற்ற காலநிலை 6 பேர் உயிரிழப்பு

16 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், அறுவர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
அத்தோடு, 13 மாவட்டங் 15

இனப் பிரச்சினைக்கான தீர்வு

## ரணிலின் வாக்குறுதியை வரவேற்கின்றோம்

சுமந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)
இனப் பிரச்சினைக்கான முழுமையான தீர்வுபுதிய அரசியலமைப்பினூடாக ஒரு வருட காலத்திற்குள்ளே செய்து முடிக்கப் 15

## ராஜபக்ஷக்கள் அழித்த நாட்டை நாம் கட்டியெழுப்புவோம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
பெரும் வரலாற்று சரித்திரம் இருப்பதாக கூறினாலும், ராஜபக்ஷர்களால் தற்போதைய ஆட்சியாளர்கள் கூட உலகம் முழுவதும் பிச்சை எடுக்க வேண்டியுள்ளதாகவும், இந்நிலையில் இருந்து நாட்டை 02

## 6 அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)
லங்கா சதொச நிறுவனம், மீண்டும் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.
6 அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது.
இந்த விலைக்குறைப்பானது இன்று முதல் நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சதொச விற்பனை நிலையங்களில் இருந்தும் இந்தப் பொருட்களை பொது மக்கள் பெற்றுக் 15

யாழ்.வருகிறார்

## ஜனாதிபதியின் மனைவி

(யாழ்ப்பாணம்)
நாட்டின் முதல் பெண் மணியும் களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறையின் சிரேஸ்ட பேராசிரியரும் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தில் அனுபவம் வாய்ந்த பெண்ணியவாதியுமான மைத்திரி விக்கிரம 15

## பிரபல ஹெரோயின் போதை வியாபாரி

வேலணையில் கைது

(வேலணை)
வேலணை அம்பிகை நகர் பகுதியில் 750 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.
பகல் சுற்று காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவினர், சந்தேகத்துக்கிடமான முறை 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
07 – 11 – 1967

மறைவு
25 – 10 – 2022

## சின்னத்துரை நேசராசா

(பொது முகாமையாளர் கட்டைவேலி ப.நோ. கூ.ச)

அந்தணந்திடல் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கு கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நேசராசா அவர்கள் நேற்று *(25.10.2022)* செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - புவனேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும் அரியமலர் (ஓய்வுபெற்ற முகாமையாளர் - கிராமிய வங்கி) அவர்களின் அன்புக் கணவரும் ஆதித்தியா (சித்த வைத்தியர்), அங்கதன் (மென்பொருள் பொறியியலாளர் - Zebra Technologies), சிந்துயன் (மூன்றாம் வருடம் மருத்துவபீடம் - யாழ். பல்கலைக்கழகம்), சந்துரு (மாணவன் - யா/ நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாரங்கன் (Arpico Insurance) அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சிவலிங்கராசா, மனோகரன், சிவராசா, புஸ்பராணி, மல்லிகா தேவி, புனிதவதி, சற்குணராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(26.10.2022)* புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் அந்தணந்திடல் கண்டா மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-5144)

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

076 541 1819

தகவல் :-
குடும்பத்தினர்

## ராஜபக்ஷக்கள்...

மீட்டெடுக்க இன,மத,சாதி,நிற பேதங்களுக்கு அப்பாற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். கலகெதர தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கடந்த (23) ஆம் திகதி கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்

அதற்கான சரியான வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருப்பதாகவும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒரு நல்ல அணியைக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, தேர்தலில் வெற்றி பெற்றால், அதன் உண்மையான வெற்றியாளர்கள் தாய் நாடும் அதன் 220 இலட்சம் மக்களும் தான் எனவும் தெரிவித்தார்.

(ம-7)

# கண்ணீர் அஞ்சலி




எமது சங்க உறுப்பினரும் காரைநகர்
ஆயுர்வேத வைத்தியருமான DR. **கஜேந்தினி**
அவர்களின் அன்பு மகள்

## செல்வி ரஜீவ் ரட்சாயகி

அவர்களின் பிரிவுத் துயரில் பங்கேற்பதுடன்
அவரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம். (13255)

அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம்
இலங்கை

# கண்ணீர் அஞ்சலி



யா/ இயற்றாளை அமெரிக்க மிசன்
தமிழ்க்கலவன் பாடசாலை
அதிபர் திருமதி **தவசொறுபி**
**சிறிமோகன்** அவர்களின்
அன்புத் தந்தை

அமரர்

## சரவணமுத்து கந்தசாமி

அவர்கள் நேற்று 25.10.2022
திங்கட்கிழமை அன்று
காலமானார். அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதுடன் அவர்தம்
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபத்தையும் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-5146)

தென்மராட்சி அதிபர் சங்கம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

# மரண அறிவித்தல்



பிறப்பு
31 – 12 – 1946

இறப்பு
24 – 10 – 2022

## பத்மநாதன் சபாநாதன்

காரைநகர் நாவற்கண்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் சபாநாதன் அவர்கள் நேற்று முன்தினம் *(24.10.2022)* திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - திரவியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருமதி தர்மகுலராஜா - சுகிர்தராணி (மானிப்பாய்) தம்பதியரின் அன்பு மருமகனும் பிறேமராஜினி (ஓய்வுபெற்ற ஆசிரியை - மானிப்பாய் மெமொறியல் ஆங்கில பாடசாலை) அவர்களின் பாசமிகு கணவரும் மனோகரன், மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவநாதன் மற்றும் காலஞ்சென்ற இராசமணி, கார்த்திகாயினி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சோமநாதன், லலிதாம்பிகை, கதிரவேலு, சுகிர்தராஜினி, றனேந்திரராஜா, உமாகாந்தராஜா, நேசராஜினி, நிருபராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை *(27.10.2022)* வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-5144)

லோட்டன் வீதி, மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

077 923 2301

தகவல் :-
மனைவி

# மரண அறிவித்தல்



மலர்வு
20 – 06 – 1951

உதிர்வு
25 – 10 – 2022

## தவேந்திரன் இராஜேஸ்வரி

தம்பசிட்டி மலையந்தோட்டத்தைப் பிற்பிடமாகவும் மாயக்கை தம்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தவேந்திரன் இராஜேஸ்வரி அவர்கள் நேற்று *(25.10.2022)* செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தவேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சுப்பிரமணியம், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வித்தியானந்தன், கவிதானந்தன், பிறேமானந்தன், கிருபானந்தன், கோகுலானந்தன், நிருபானந்தன், பாமினி ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரதீபா, சிவாஜினி, காயத்திரி, கிருஸ்ணாளினி ஆகியோரின் அன்பு மாமியாரும் தன்ஜா, ஜினிசா, ஹிஷோத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை *(27.10.2022)* வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-5147)

மாயக்கை,
தம்பசிட்டி.


077 791 4020

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிட்டமோல் உட்பட அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## மருத்துவமனைகள் முடங்கும் அபாயம்



**(கொழும்பு)**

**நாட்டில் உள்ள பெரும்பாலான அரச மருத்துவ மனைகளில் 90 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் செயலாளர் மருத்துவ கலாநிதி. ஹரித அலுத்கே, நாட்டில் உள்ள மருத்துவ மனை வலையமைப்பு பற்றாக் குறை காரணமாக வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பரசிட்டமோல், பிரிட்டோன், சேலைன் உள்ளிட்ட அத்தியாவசிய மருந்துகளும் பற்றாக் குறையாக இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெப்பத் தாக்குதலைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் எஸ்பிரின் போன்ற அவசரகால மருந்துகள் கொழும்பு பொது மருத்துவமனையில் கூட பற்றாக் குறையாக உள்ளன.

அறுவை சிகிச்சை செய்யும் போது பயன்படுத்தப்படும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்குள் பற்றாக்குறை நிலவுகிறது.

எனவே, நோயாளிகள் மருந்தகங்களில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள மருத்துவர்களால் அறிவுறுத்தப்படுகிறார்கள். எனினும் தற்போது மருந்தகங்களிலும் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனவே நோயாளிகள் வாங்க முடியாத அளவுக்கு மருந்தக்ங்களில் அதிக விலைக்கு மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.

அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக, எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் பரிசோதனை போன்ற ஆய்வகங்களில் பிரச்சினைகள் இருப்பதாகவும் அலுத்கே குறிப்பிட்டார். (நி)

# முட்டை விலை மேலும் உயரலாம்

## கால்நடை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் எமது நாடு கடுமையான முட்டை தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் இதன் காரணமாக ஜனவரி மாதத்திற்கு பிறகு முட்டை விலை மேலும் உயரலாம் என்றும் இலங்கை கால்நடை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் சுசந்த மல்லவாராச்சி தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற இலங்கை கால்நடை மருத்துவ சங்கத்தின் வருடாந்த விஞ்ஞான அமர்வில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முட்டை பெறும் கோழிகளுக்கு தாய் விலங்குகள் இல்லாததே இந்த பிரச்சினைக்கு முக்கிய காரணம். வருடாந்தம் குறைந்த பட்சம் 80,000 தாய் விலங்குகள் தேவைப்பட்டாலும் இம்முறை கிட்டத்தட்ட பத்தாயிரம் தாய் விலங்குகளை மட்டுமே இறக்குமதி செய்ய முடிந்தது. அதற்கு முக்கிய காரணம் நமது நாடு தற்போது சந்தித்து வரும் பொருளாதார நெருக்கடியாகும்.

நிதிப் பிரச்சினை காரணமாக கால்நடை துறைக்கு அத்தியாவசிய சேவைகளுக்கு முன்னுரிமை கிடைக்கவில்லை. அதனால் தாய் விலங்குகளின் இறக்குமதி மிகவும் குறைந்துள்ளது. இது நிச்சயமாக எதிர்காலத்தில் ஒரு கடுமையான பிரச்சினையாக இருக்கும்.

இப்போது தேவையான தாய் விலங்குகளை கொண்டு வந்தாலும் அவை முட்டையிட்டு குஞ்சுகளை வளர்க்கும் போது எங்களுக்கு முட்டை கிடைக்க குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். இது குறித்து இதுவரை முறையான திட்டங்கள் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் ஜனவரி மாதத்திற்குள் எமது நாடு கடுமையான முட்டைத் தட்டுப்பாட்டுக்கு முகம் கொடுக்க நேரிடும். மேலும் இதன் காரணமாக ஜனவரி மாதத்திற்கு பிறகு முட்டை விலை உயரலாம் என அவர் தெரிவித்தார். (நி)

# முச்சக்கரவண்டிக்கான பயணக் கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

முச்சக்கரவண்டிகளின் முதலாவது கிலோ மீற்றர் பயணக் கட்டணங்கள் 20 ரூபாவால் குறைக்கப்படுகின்றன.

முச்சக்கர வண்டிகளுக்கு எரிபொருள் ஒதுக்கீட்டை இரட்டிப்பாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமையை அடுத்தே இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

இதுவரை முச்சக்கர வண்டிகளுக்கு 5 லீற்றர் பெற்றோல் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தது.

எனினும் அதனை இரட்டிப்பாக்குவதாக அரசாங்கம் நேற்று முன்தினம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முருகன் வித்தியாலய மாணவி பளுதூக்கல் போட்டியில் தங்கம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற பெண்களுக்கான பளுதூக்கும் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மாணவி எஸ்.தனுயா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கும் போட்டிகள் கடந்த சனிக்கிழமை பொலநறுவை றோயல் கல்லூரியில் இடம்பெற்ற போது 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய மாணவி எஸ்.தனுயா 64 கிலோ எடை பிரிவில் 120 கிலோ பளுவை தூக்கி தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார். (4-90)

### தேசிய மல்யுத்தப் போட்டி

## முல்லைத்தீவு பாடசாலைகளுக்கு தங்கம் மற்றும் வெள்ளி



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மல்யுத்தப் போட்டியில் முதன் முறையாக முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி, முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலய மாணவர்கள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று சாதனையைப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த 22,23,24 ஆகிய 3 நாட்கள் கம்பஹாவில் நடைபெற்ற போட்டியில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.றஜிதன் 57-61 கிலோ நிறைப் பிரிவில் தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ. வினேசன் 51-55 கிலோ நிறைப் பிரிவில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுச் சாதனையைப் பதிவு செய்துள்ளனர். இப்போட்டியில் வித்தியானந்தா கல்லூரி மாணவர்கள் 12 பேர் பங்கு கொண்டதுடன் 5 பேர் காலிறுதி வரை முன்னேறியதுடன் கலைமகள் வித்தியாலய 7 மாணவர்கள் பங்கு கொண்டனர். ஒருவர் இறுதி வரை முன்னேறியமையும் குறிப்பிடத்தக்கது. (4-90-299)



பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தேசிய மட்ட குத்துச் சண்டை போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று வவுனியா மாவட்ட பாடசாலைகள் தேசிய போட்டியில் பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளன. (படம்-சதீஸ், வசந்தரூபன்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் முதலாமிடத்தை தீவக கல்வி வலயத்தை பிரதிநிதித்துவப் படுத்திய யா/சிறிய புஸ்பம் கன்னியர் மடம் மகா வித்தியாலய அணியினர் பெற்றுக் கொண்டனர்.



அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்கள்,பெண்களுக்கான தேசிய மட்ட உடற்பயிற்சி போட்டிகள் திருகோணமலை கிண்ணியா மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (படம்-கனகராஜா)

## ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2022-16.11.2022

### கும்பம்

**உயர்நிலையை அடைய கடுமையாக உழைக்கும் கும்ப இராசி வாசகர்களே!**

ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. மேலும் செவ்வாய் சனியைப் பார்க்கிறார். எனவே மிகமிகக் கவனம் தேவைப்படும் நேரம் இது.

**துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 2 ஆம் திகதி தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கப் போகிறார் சுக்கிரன். இதனால் கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். தேங்கிய காரியங்கள் துரிதமாக நடக்கும். ஆயினும் விரயச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் சேமிக்க இயலாது. செலவுகள் அதிகரிக்கும். விரயங் களைச் சமாளிக்கும் ஆற்றல் உங்க ளுக்கு உண்டு. என்றாலும் நிம்மதி குறைவு ஏற்படலாம்.

**துலாம் - புதன் சஞ்சாரம்**

8 க்கு அதிபதி 9 இல் வரும் போது தொழிலில் சில இழப்புகளைச் சந்திக்க நேரிடும். இடமாற்றம், வீடு மாற்றங்களால் விரயங்கள் ஏற்படும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். முன்னோர் வழிச் சொத்துக்களால் முறையான பங்கீடுகள் கிடைக்கும். என்றாலும் அவை கைக்கு வந்து சேருவதில் தாமதம் உருவாகும். "ஒரு மடங்கு வரவு வந்தால் இரு மடங்கு செலவு ஆகின்றதே" என்று கவலைப்படுவீர்கள். வாக்கு ஸ்தானாதிபதி வக்கிர இயக்கத்தில் இருப்பதால் உங்கள் பேச்சே உங்களுக்கு எதிரிகளை உருவாக்கலாம். எனவே எதையும் யோசித்துப் பேசுவது நல்லது.

**மிதுன - செவ்வாய் வக்கிரம்**

ஐப்பசி 18 ஆம் திகதி செவ்வாய் வக்கிரம் பெறுவதோடு செவ்வாயின் பார்வையும் சனியின் மீது பதிவதால் மிகுந்த கவனம் தேவை ப்படும். வீண்விரயங்களும் மனக் கச ப்புகளும் அதிகரிக்கும். இக்காலத்தில் ஆன்மிகப் பயணங்களும் வழிபாடு களும் அருளாளர்களின் ஆலோசனை களும் கைகொடுக்கும். உத்தியோகத்தில் பிரச்சினை மேல் பிரச்சினை வந்து அலைமோதும். குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

**விருச்சிக - புதன் சஞ்சாரம்**

ஐப்பசி 23 ஆம் திகதி புதன் பத்தாம் இடத்திற்கு வரும் போது நன்மையும் தீமையும் கலந்தே நடக்கும். தொழில் வளர்ச்சியில் குறுக்கீடு ஏற்படத்தான் செய்யும். இருப்பினும் அதைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பது அரிது.

**விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 26 ஆம் திகதி சுக்கிரன் 10 ஆம் இடத்திற்கு வரும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஏழரைச் சனி நடப்பதால் சில நேரங்களில் வெற்றி கைநழுவியும் செல்லலாம். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வருகின்ற நேரம் இது.

### மீனம்

**வளைந்து கொடுத்து வாழ்வில் முன்னேறும் மீன ராசி வாசகர்களே!**

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கிறார். உச்சம் பெற்ற புதன் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும்.

**துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்**

அஷ்டமாதிபதி அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் கூடுதல் கவனம் தேவை. இழப்புகளும் விரயங்களும் வந்து சேரும். எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். உத்தியோகத்தில் இட மாற்றம், இலாகா மாற்றம் திருப்தி அளிக்காது. நண்பர்கள் நம்பிக்கைக் குரிய விதத்தில் நடந்து கொள்ள மாட்டார்கள். நாடு மாற்றம், வீடுமாற்றம் போன்றவை எதிர்பார்த்தபடி வந்து சேரும். சகோதர வர்க்கத்தினர் சச்சரவின் காரணமாக உங்களை விட்டு விலக நேரிடலாம். நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரம் இது.

**துலாம் - புதன் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம் உண்டு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற புதன் 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பார். கரைந்த சேமிப்புகளை மீண்டும் உயர்த்துவீர்கள். கல்யாணம் போன்ற சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெற எடுத்த முயற்சி கைகூடும். கல்வி, வேலைவாய்ப்பு சம்பந்தமாக ஏதேனும் புது முயற்சிகளில் நீங்கள் ஈடுபட்டிருந்தால் அதில் அனுகூலம் கிடைக்கும்.

**மிதுன - செவ்வாய் வக்கிரம்**

ஐப்பசி 18 ஆம் திகதி செவ்வாய் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. துணிவும் தன்னம்பிக்கையும் குறையும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. ஆரோக்கியத் தொல்லைகள் கூடும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகளால் அவதிப்பட நேரிடும். "பணவிரயம் அதிகரிக்கிறதே" என்று கவலைப்படுவீர்கள். இந்தக் காலத்தில் பரிகாரங்களும் வழிபாடுகளும் கைகொடுக்கும்.

**விருச்சிக - புதன் சஞ்சாரம்**

ஐப்பசி 23 ஆம் திகதி புதன் 9 ஆம் இடத்திற்கு வருவது யோகம் தான். வீடு கட்டுவது, வீடு வாங்குவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். சுப செலவுகள் அதிகரிக்கும். தந்தை வழிச்' சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும்.

**விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 26 ஆம் திகதி சில நல்ல காரியங்கள் நடைபெறும் நேரம் இது. கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு ஒரு நல்ல காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பர். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஊதிய உயர்வு இப்பொழுது கிடைப்பதற்கான அறிகுறி தென்படும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தர அரசியல் தீர்வு கோரி மன்னாரில் மக்கள் போராட்டம்







(மன்னார்)

வடக்கு- கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 86 ஆவது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று காலை மன்னார்-மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெள்ளாங்குளம் பகுதியில் இடம் பெற்றது.

வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

குறித்த 100 நாள் செயல் முனைவின் 86 ஆம் நாள் போராட்டத்தில் வெள்ளாங்குளம்கிராமத்தில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டதோடு மன்னார் மாவட்ட சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர். (4-285)

# அமெரிக்க திறைசேரி குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க திறைசேரியின் உதவி செயலாளர் ரொபர்ட் கெப்ரோத் உள்ளிட்ட தூதுக் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர், அரச தலைவர்கள், பொருளாதாரத் தலைவர்களுடன் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது மற்றும் நாட்டின் எதிர்கால பயணம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ரொபர்ட் கெப்ரோத் சில வாரங்களுக்கு முன்னரும் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரணில் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் புரட்சி வெடிக்கும்

## அரகல மக்கள் இயக்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த சில மாதங்களுக்கு முன்பு எப்படி கோட்டாபய அரசின் அமைச்சர்கள் ஓடி ஒளிந்தார்களோ அவ்வாறான நிலை ரணில் அரசாங்கத்துக்கும் ஏற்படலாம். பயங்கரவாதத் தடைச் சட்டம், ஊரடங்குச் சட்டம் இது எல்லாம் மக்கள் பசிக்கு அடங்காது என அரகல மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த குறித்த இயக்கத்தின் உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வைத்து நாட்டு மக்களையும் நாட்டையும் ரணில் அரசு பயமுறுத்தி வருகிறது.

இதனூடாகத்தான் அனைத்து மாணவ ஒன்றியத்தின் மாணவர் தலைவரையும் தேரரையும் கைது செய்துள்ளது.

ஜாதி, பேதம், மதம், மொழி கடந்து எமது பசிக்கு போராடினோம். அதேபோல் கைது செய்ய பட்டவர்களை விடுவிக்க அனைவரும் ஒன்று திரள வேண்டும். இது அரசியல் இல்லை அரகல மக்கள் புரட்சி. மக்கள் வெள்ளம் வந்தால் எந்த தடுப்பு அனையும் சரிவராது என்பது மக்கள் வயிற்றில் அடித்தவர்களுக்கு நன்கு தெரியும்.

எனவே 19,20,22,21 சட்டங்களை உங்கள் தேவைக்கு ஏற்ப ஏற்படுத்திக் கொள்ளாமல் மக்கள் தேவைகளுக்கு ஏற்ப செயற்படுங்கள் என்று அரசுக்கு கோரிக்கை விடுகின்றோம்.

பொருளாதார நெருக்கடியை சீர் செய்ய வேண்டும். கைது செய்யபட்டவர்களை உடன் விடுவிக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் உடன் நீக்க வேண்டும். அதை விடுத்து மக்கள் கோபத்துக்கும் சாபத்திற்கும் வழி செய்ய வேண்டாம் எனக் கூறி கொள்ள விரும்புகிறோம் என்று அரகல மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது. (நி)


## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் அ.லெ.முகம்மது நபீல் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி ஹாஜியானி சாரா உம்மா அப்துல் லெத்திப்

தோற்றம்-1944.06.20

மறைவு-2022.10.20



அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

(சி-5142)

வவுனியா
தேசிய கல்வியியற் கல்லூரி,
3 ஆம் அணி நட்புக்கள்.


# இராசிபலன்

26.10.2022
ஐப்பசி 09, புதன்கிழமை
பிரதமை பிற்பகல் 4.02 மணிவரை

சுவாதி பிற்பகல் 3.12 மணிவரை
சுபநேரம்- 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் -12.03-1.33 மணிவரை

கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்
சந்திராஷ்டமம்-ரேவதி,அச்சுவினி

வளவன்

**மேஷம்** — தொலைபேசி வழியில் கிடைக்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்தினர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கடகம்** — விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபட வேண்டிய நாள், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**துலாம்** — வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உடல் நலன் சீராகும்.

**சிம்மம்** — நினைத்தது நிறைவேறும் நாள், பணத் தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர் , நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** — தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், காரியங்களில் வெற்றி பெற கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கும்பம்** — வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — பிள்ளைகளின் வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** — திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** — மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால வளர்ச்சி காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம்.

அன்புத் தீயால் அனைத்துத் தீயையும் அணைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா மாவட்டத்தில்
# போதைப்பொருள் பாவனை மாணவர்களிடையே அதிகரிப்பு

(குருமன்காடு)

**வவுனியாவில் மாணவர்களிடையே வேகமாக போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதால் பெற்றோரும் பாடசாலைச் சமூகத்தினரும் விழிப்பாக இருக்க வேண்டும் என மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெயக்கெனடி தெரிவித்துள்ளார்.**

வவுனியா மாவட்டத்தில் இளைஞர், யுவதிகளின் தற்போதைய நிலை தொடர்பில் நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் நகரையண்டிய சில பாடசாலைகளில் சில மாணவர்கள் மற்றும் சில மாணவிகள் போதைப்பொருள் பாவனையில் ஈடுவதாக எமக்கு தனிப்பட்ட ரீதியிலும் பொலிஸார் ஊடாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இன்னும் பல பாடசாலைகளில் மாணவர்கள் போதைப் பொருட்களை கொண்டு வருவதாகவும் அதனை தமது சக மாணவ, மாணவிகளிடம் கைமாற்றுவதாகவும் தகவல் கிடைத்துள்ள போதும் சில பாடசாலைகள் தமது பாடசாலையின் பெயரைக் கருத்தில் கொண்டு அதனை வெளிக்கொண்டு வர தயக்கம்காட்டுகின்றன.

மாலை வேளைகளில் வவுனியா வைரவபுளியங்குளம், பூங்கா வீதி, குடியிருப்பு, குருமன்காடு உள்ளிட்ட பகுதிகளுக்கு வரும் வெளிப் பகுதிகளைச் சேர்ந்த இளம் சமூகத்தினர் போதைப்பொருட்களை பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பிலும் அவர்களது நடத்தைகள், அவர்களது நண்பர்கள், அவர்கள் சென்று வரும் இடங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

வடக்கில் யாழ்.மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும் அதனால் ஏற்படும் விபரீத விளைவுகள் குறித்து நாம் தினமும் அறிந்து வரும் நிலையில் வவுனியா மாவட்டத்தில் இந்த நிலை அதிகரித்து வருகின்றது.

இதனால் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு போதைப் பொருள் பாவனையற்ற சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியாவில் உள்ள அரச மருத்துவர் ஒருவர் தனது தனியார் மருத்துவ நிலையம் ஊடாக மாதாந்தம் 400 பெட்டி போதை மாத்திரைகளை கொள்வனவு செய்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-250)



மு/விசுவமடு மகா வித்தியாலய அதிபர் எம்.என்.அன்ரன் குலதாஸின் மணிவிழா கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை பிரதான மண்டபத்தில் மணிவிழா குழுத் தலைவர் த.அருள்குமரன் தலைமையில் நடைபெற்றது.

# ஆபத்தான நிலையில் அல்லாரை வீதி மதவு
## சீர் செய்யுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)


தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மீசாலை-அல்லாரை வீதியில் உள்ள மதவு இடிந்து விழும் அபாய நிலையில் காணப்படுவதனால் அதனை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் பிரகாஷ் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீசாலை-அல்லாரை வீதி ஊடாக தினமும் பல கனரக வாகனங்கள் பயணிக்கின்றன. தற்போது குறித்த வீதியில் உள்ள மதவின் அடிப்பாகம் கடுமையாக சேதமடைந்திருப்பதால் கனரக வாகனங்கள் பயணிக்கும் போது மதவு இடிந்து விழும் அபாயம் காணப்படுகிறது.

எனவே அபாய நிலைமையை கருத்திற்கொண்டு சாவகச்சேரி நகரசபை, உரிய வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரியப்படுத்தி மதவினை சீர்செய்ய வேண்டும் என மேலும் அவர் கோரிக்கை விடுத்தார். (4-30)

# சிறுத்தீவு சூலாயுதருக்கு இந்து இளைஞர்களால் வழிபாடு



(அராலி)

யாழ்ப்பாணம் பண்ணை சிறுத்தீவில் (பழைய பெயர் சிவன் தீவு) வீற்றிருந்து அருள் ஆட்சி புரியும் சூலாயுதர் சிவன் கோவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்து இளைஞர்களால் 3 வருடங்களின் பின் பூசைகள் நடத்தப்பட்டன. குறித்த சிவன் ஆலய மூல மூர்த்தியான சூலாயுதனார் கடந்த 2017 ஆம் ஆண்டு விஷமிகளால் காணாமல் ஆக்கப்பட்டு மீண்டும் அதே ஆண்டில் இந்து மீனவர்களால் மீள் பிரதிஷ்டை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-104)

# கலாபூஷண விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதால் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி 60 வயதினை பூர்த்தி செய்யும் கலாபூஷண விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார கிளையில் பெற்று எதிர்வரும் 2022.11.01 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கவும்.

தனிப்பட்ட முறையில் கலாபூஷண விருது விண்ணப்பங்கள் கோரல் நடைபெறமாட்டாது என்பதுடன் கடந்த வருடங்களில் கலைஞர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2022 ஆம் ஆண்டிற்கோ அல்லது எதிர்வரும் வருடங்களுக்கோ செல்லுபடியாகாது என பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (4)

# மாகாணசபைத் தேர்தலை நடத்த எதிர்க்கட்சிகள் குரல் கொடுக்க வேண்டும்
## சுரேஷ் க. பிரேமச்சந்திரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருகின்றது. அவற்றுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் குரல் கொடுக்க முன்வரவேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டே மாகாணசபை முறைமைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் இந்த மாகாணசபைகளை தென்னிலங்கையின் ஆளும் கட்சியினரோ அல்லது எதிர்க்கட்சியினரோ விரும்பவில்லை.

இதன் காரணமாகத்தான் அதிகாரப் பகிர்விலோ அல்லது 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதிலோ அக்கறையின்றி இருக்கின்றார்கள்.

இப்பொழுது உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை காலகதியில் நடத்தப்பட வேண்டுமென்று பல்வேறுபட்ட எதிர்க்கட்சிகளும் கூட்டாக முடிவெடுக்கின்றன. நாட்டில் ஜனநாயகம் தழைப்பதற்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், இதே வேகத்தில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும்படி ஏன் இவர்கள் கோரவில்லை? அடுத்த வருடம் மார்ச் மாதத்திற்கு முன்னராக நடக்க வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அரசாங்கம் பிற்போடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் எதிர்க்கட்சிகள் நான்கு வருடங்கள் கடந்தும் மாகாண சபைகளுக்கான தேர்தல் வைக்கப்படாமை குறித்துப் பேசாமல் இருப்பது வருத்தத்திற்குரியது.

வடக்கு-கிழக்கு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டால் மாத்திரமே இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு தமிழ் பேசும் மக்கள் தங்களாலான பங்களிப்புகளை வழங்க முடியும். கொழும்பை நம்பி யாரும் முதலீடு செய்ய வரமாட்டார்கள்.

ஆகவே இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்று உண்மையிலேயே அரசாங்கமோ எதிர்க்கட்சிகளோ விரும்பினால் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொங்கலுக்கு மேலுமொரு தொகுதி

## கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி உறுதி

**(கொழும்பு)**

**தீபாவளி தினத்தன்று தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டதைப் போல் பொங்கலுக்கு மேலுமொரு தொகுதி தமிழ்க் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இந்த விடயம் தொடர்பாக அவர் முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் மேலும் தெரிவித்த அவர், "நானும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ்க் கைதிகள் விடுவிப்புப் பற்றி ஜனாதிபதியுடன் உரையாடினோம்.

தீபாவளி தினத்தன்று விடுவிக்கப்பட்டதைப் போல் பொங்கலுக்கு இன்னொரு தொகுதி தமிழ்க் கைதிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அருகிலிருந்த பிரதமர் மற்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க, யோகராஜன் ஆகியோரும் சாதகமான கருத்துக்களைப் பகிர்ந்தனர். (நி)


# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

01.01.2023 முதல் 31.12.2023 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2023

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 27.10.2022 - 11.11.2022 பி.ப 02.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 14.11.2022 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 14.11.2022 மு.ப 10.30 மணி

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | கேள்வித் தொகை (VAT,NBT) தவிர | கேள்வி வைப்புப் பணம் (மீள் அளிக்கக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| கச்சாய் உப அலுவலகம் | | | | |
| 1 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,191,050.00 | 11,950.00 | 750.00 |
| 2 | களஞ்சிய அறை இல – 01 | 27,700.00 | 500.00 | 750.00 |
| 3 | களஞ்சிய அறை இல – 02 | 26,150.00 | 500.00 | 750.00 |
| 4 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் | 14,900.00 | 500.00 | 750.00 |
| 5 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் – 01 | 18,100.00 | 500.00 | 750.00 |
| 6 | கொடிகாமம் மீன் சந்தையில் மீன் வெட்டும் இடம் – 02 | 20,750.00 | 500.00 | 750.00 |
| வரணி உப அலுவலகம் | | | | |
| 7 | வரணி பொதுச்சந்தை | 63,650.00 | 650.00 | 750.00 |
| 8 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | 26,700.00 | 500.00 | 750.00 |
| கைதடி உப அலுவலகம் | | | | |
| 9 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 214,250.00 | 2,150.00 | 750.00 |
| 10 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 250,100.00 | 2,550.00 | 750.00 |
| மிருசுவில் உப அலுவலகம் | | | | |
| 11 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 76,650.00 | 800.00 | 750.00 |
| 12 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 40,400.00 | 500.00 | 750.00 |
| 13 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 29,500.00 | 500.00 | 750.00 |
| 14 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 16,100.00 | 500.00 | 750.00 |
| நாவற்குழி உப அலுவலகம் | | | | |
| 15 | நாவற்குழி பொதுச்சந்தை | 31,350.00 | 500.00 | 750.00 |

**நிபந்தனைகள்:-**

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் 27.10.2022 தொடக்கம் 11.11.2022 பி.ப 02.00 மணி வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வி வைப்புத் தொகை, படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
4. 14.11.2022 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளுக்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டு வரப்படல் வேண்டும். அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைக்கான அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் ஒரு வார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/8 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"தவிசாளர்/செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**பிரதேசசபை, சாவகச்சேரி.**

(C5143)


# வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை சுங்கத்தால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி செப்டெம்பர் மாதத்தில் வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 5.75% அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானம் 1,093.98 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

இதில் ஆடை ஏற்றுமதி பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# எரிசக்தி அமைச்சரை சந்தித்தார்

## அமெரிக்காவின் பொருளாதார அதிகாரி



(கொழும்பு)

ஆசியாவுக்கான அமெரிக்க உதவித் திறைசேரி செயலாளர் ரொபர்ட் கப்ரோத் நேற்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் அரச நிறுவனங்களின் சீர்திருத்தங்கள், பெற்றோலியம் மற்றும் மின்சக்தி துறைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதேவேளை இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த இந்த மாற்றங்கள் அவசியம் என்று தூதுவர் ஜூலி சுங் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (நி)


# பதவி வெற்றிடம்

சிங்களம் சரளமாகப் பேசத் தெரிந்த
பெண் உத்தியோகத்தர் தேவை

யாழ்.நகருக்கு அண்மையில்
இருப்பவர்களுக்கு முன்னுரிமை.

இ

தொடர்பு:- 076 097 3121

# பதவி வெற்றிடம்

ஒப்புநோக்குநர் (ஆண்கள்)
- இரவுக்கடமை

- யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை.
- வயதெல்லை 35க்கு மேல்

இ

தொடர்பு:- 076 097 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்நிலைப் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு சந்தேகநபர் உட்பட மூவர் உயிரிழப்பு!

## அமெரிக்காவில் துயரச் சம்பவம்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவின் மிசோரியில் உள்ள செயின்ட் லூயிஸில் உள்ள உயர்நிலைப் பாடசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர். ஏழு பேர் படுகாயமடைந்தனர்.**



நேற்று முன்தினம் திங்கட்கிழமை சென்ட்ரல் விஷ்வல் அண்ட் பெர்ஃபார்மிங் ஆர்ட்ஸ் உயர்நிலைப் பாடசாலையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

பாடசாலைக் கட்டடத்தின் கதவுகள் பூட்டப்பட்டிருந்த நிலையில் சந்தேகநபர் எப்படி உள்ளே நுழைந்தார் என்பது உடனடியாகத் தெரியவில்லை.


துப்பாக்கிதாரியின் ஆயுதம் தாக்குதலின் இடைநடுவே செயலிழந்ததால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டதாக சாட்சிகள் கூறுகின்றனர்.

தாக்குதல்தாரி 19 வயதுடைய முன்னாள் மாணவர் என பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டதுடன், குறித்த நபர் பொலிஸாருடன் துப்பாக்கிச் சூடு நடத்தி பொலிஸாரின் பதில் தாக்குதலால் காயமடைந்த பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சுமார் 400 மாணவர்களைக் கொண்ட பாடசாலையில் அவர் நடத்திய தாக்குதலுக்கான நோக்கம் தெளிவாக இல்லை என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

# வான்வழித் தாக்குதலில் 80 பொதுமக்கள் கொன்று குவிப்பு

## மியன்மார் இராணுவத்தினரின் கொடூரம்



(மியன்மார்)

மியன்மார் நாட்டில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் பொதுமக்கள் 80 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்நாட்டின் வடக்கு மாகாணமான கச்சினில் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த அரசியல் அமைப்பின் ஆண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது.

இந்நிலையில் விழா நடைபெற்ற பகுதியில் இராணுவத்தினர் விமானம் மூலம் குண்டு வீசி தாக்குதல் நடத்தினர். இதில் பார்வையற்றோர், பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் உட்பட 80 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் அந்நாட்டு இராணுவ அரசு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்தத் தாக்குதல் உறுதிப்படுத்தப்பட்டது.

இதனிடையே மியன்மார் இராணுவத்தின் இந்தத் தாக்குதலுக்கு ஐ.நா சபை கண்டனம் தெரிவித்துள்ளது. நிராயுதபாணியான பொதுமக்களுக்கு எதிராக இராணுவம் தாக்குதல் நடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இதற்கு இராணுவ அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ஐ.நா வலியுறுத்தியுள்ளது. (நி)

## இராணுவ வீரர்களுடன்

# தீபாவளி கொண்டாடிய பிரதமர் நரேந்திர மோடி



(டில்லி)

நேற்று முன்தினம் தீபாவளி தினத்தையொட்டி பல பிரபலங்கள் தங்களது வாழ்த்துக்களையும் கொண்டாட்டங்களையும் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியை பிரதமர் நரேந்திர மோடி இராணுவ வீரர்களுடன் கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

அந்த வகையில் இந்த ஆண்டும் கார்கில் சென்ற பிரதமர் நரேந்திர மோடி இராணுவ வீரர்களுடன் கொண்டாடியுள்ளார்.

அப்போது வீரர்கள் அவருக்காக ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த வந்தே மாதரம் பாடலை பாடிக் காட்டியுள்ளனர்.

இதன்போது எடுக்கப்பட்ட வீடியோவை பிரதமர் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். (நி)

# தீவிரமடையும் உக்ரைன்-ரஷ்யா மோதல் அணு ஆயுதங்கள் தொடர்பிலும் எச்சரிக்கை

(மொஸ்கோ)

கதிர்வீச்சுக்களை வெளிப்படுத்தும் அணுகுண்டை போரில் உக்ரைன் பயன்படுத்தும் என்று ரஷ்யா கவலைப்படுவதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர்கள் உக்ரைன் விவகாரம் குறித்துத் தொலைபேசியில் உரையாடியுள்ளனர்.



இதன் போதே [illegible]

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சரால் முன்வைக்கப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் எதுவும் ரஷ்யா வழங்காத போதிலும் உக்ரைனில் நிலைமை கட்டுப்பாட்டை இழந்து மிகவும் மோசமாக சென்றுகொண்டிருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ரஷ்யா முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பிரிட்டன் தரப்பு மறுத்துள்ளது.

இதேபோல் ரஷ்யாவின் கவலை மற்றும் குற்றச்சாட்டை உக்ரைனும் மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

Botanical Name- Agele marmelos
Family- Rutaceae

# வில்லை/கூவிளம்





டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மர இனத்தைச் சேர்ந்தது. 10-13 மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது. முட்களுடன் கூடிய கிளைகளைக் கொண்டது. சாம்பல் நிற பட்டைகளைக் கொண்டது. கூட்டிலை, ஒன்று விட்ட இலையமைப்பைக் கொண்டது. இருபாலான, வெளிறிய பச்சை நிறமுடையவை. கோள அல்லது உருண்டை வடிவ பழங்கள், நிறைய விதைகள் காணப்படும். வைகாசி மாதங்களில் பூக்களைக் காணலாம்.

இது ஒரு காயகல்ப மூலிகையாகும். இதனுடைய இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின், பட்டை, ஓடு, வேர் அனைத்துமே மருத்துவக் குணங்கள் நிறைந்தவை.

200 வில்வம் இலைகளை எடுத்துக் கழுவி சாறு எடுத்து அதில் 1/3 பங்காக சுண்டக் காய்ச்சி சிறிது தேன் சேர்த்து இருவேளை எடுத்து வர தொடர்ந்து தாக்கும் காய்ச்சலை அல்லது சுரத்தை தணிக்கக் கூடியது.

ஒரு கைப்பிடியளவு வில்வம் இலைகளை எடுத்து கசக்கி 200 மில்லி குளிர்ந்த நீரில் ஓர் இரவு முழுவதும் ஊறவிட்டு அதிகாலை அருந்த வயிற்றுப்புண் ஆறும்.

வில்வம் பழத்துடன் சிறிது வெண்ணெயும் சர்க்கரை அல்லது பனை வெல்லமும் சேர்த்துக் கொடுக்க உடலுக்கு தேஜசை கொடுக்கும். புத்திக் கூர்மையும் கிடைக்கும்.

மனநோய் உள்ளவர்கள் தினமும் 2 வில்வம் இலைகளை மென்று உண்பது சிறந்தது. வில்வம் வேர் 15 கிராம் அளவு எடுத்து நைய இடித்து 150 மில்லி நீரில் போட்டு கொதிக்க வைத்து வடித்து காலையில் மட்டும் இளஞ்சூடாக அருந்தி வர ஏழு உடற்கட்டுக்களையும் பலப்படுத்தி உடலிற்கு பலத்தைக் கொடுக்கும். நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். வில்வ இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து வைத்துக் கொண்டு இதற்கு 1/4 பங்கு மிளகு சேர்த்து இரண்டையும் நுண்ணிய பொடியாக்கி 1-2 கிராம் அளவுடன் தேன் கலந்து காலை, மாலை கொடுக்க நாட்பட்ட இருமல், மண்டைச்சளி, தும்மல் ஆகியன நீங்கும். இரத்தத்தை சுத்திகரிக்கும். பித்தம் தொடர்பான நோய்களைப் போக்கும்.

வில்வம் இலைகள், வேப்பிலை, மஞ்சள் பொடி சம அளவு மூன்றின் பொடிகளையும் கலந்து வெந்நீரில் குழைத்து சருமத்தில் பூசி 30 நிமிட நேரம் ஊறவிட்டு குளித்து வர தோல் நோய்கள், அரிப்பு போன்றன நீங்கும். தோலை பளபளப்பாக வைத்திருக்க உதவும்.

வில்வ வேர், சிற்றமுட்டி வேர், சுக்கு மூன்றையும் சம அளவு எடுத்து 8 பங்கு நீர் விட்டு 1/8 பங்காக சுண்டக் காய்ச்சி 60 மில்லி காலை, மாலை குடித்து வர மூட்டுவலி, வாதநோய்கள் தீரும்.

வில்வம் இலைத் துளிர்களை வாட்டி துல்லிய சீலையில் முடிந்து ஒற்றடமிட கண் சிவப்பு நீங்கும்.

வில்வம் வேர்களை சேகரித்து சிறு துண்டுகளாக வெட்டி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு தேனில் குழைத்து சாப்பிட்டு வர விக்கல், வாந்தி, சுவையின்மை நீங்கும்.

வில்வம் காயை வெட்டி சதைகளை எடுத்து உலர்த்தி பொடி செய்து சிறுவர் களுக்கு 1-2 கிராம் எடையும் முதியவர்களுக்கு 2-4 கிராம் எடையும் தினம் இருமுறை கொடுத்து வர சீதக்கழிச்சல், குருதி கழிச்சல் நிற்கும்.

வில்வம் காயுடன் இஞ்சி, பெருஞ்சீரகம் சேர்த்து குடிநீர் காய்ச்சி 60 மில்லி காலை, மாலை எடுத்து வர மூலநோய் குணமாகும். வில்வம் பழச் சதைக்கு (1பங்கு) 2 பங்கு நீர் விட்டு அரைத்து வடிகட்டி சீனி அல்லது சர்க்கரை ஒரு பங்கு சேர்த்துக் காய்ச்சி தந்துபாகத்தி வழித்து 15 மில்லி காலை, மாலை உட்கொண்டு வர குடலிற்கு வலுவைக் கொடுக்கும்.

வில்வம் பூக்களை வைகாசி மாதத்தில் சேகரித்துக் கழுவி, உலர்த்தி வைத்துக் கொள்ளவும். 11/2 தேக்கரண்டி உலர்ந்த வில்வம் பூக்களை 150 மில்லி வெந்நீரில் போட்டு 10 நிமிட நேரம் ஊறிய பின்பு தேநீர் போல் தினமும் ஒரு வேளை அருந்தி வர உடல் உஷ்ணம் தணியும். உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோயையும் கட்டுப்படுத்தும்.

வில்வம் பழங்கள் நிறைய கிடைக்கும் போது பழங்களை சேகரித்து சதைகளை எடுத்து உலர்த்தி, பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப் பொடியில் 1-2 கிராம் அளவு எடுத்து தேனில் கலந்து காலை, மாலை கொடுத்து வர நாட்பட்ட கழிச்சல், பசியின்மை ஆகியன நீங்கும். குடலிற்கு வலுவைக் கொடுக்கும்.

வில்வ மரத்தின் நிழலும் காற்றும் கூட எமது உடலிற்கு சக்தியை தரவல்லது. நேர் மறை சக்திகளை உற்பத்தி செய்யக் கூடியது. நீரிழிவு நோயாளிகள் கூட வில்வம் பழத்தைச் சாப்பிடலாம். பொதுவாக எமது ஆரோக்கியத்தை தக்கவைக்க வில்வம் பழம் கிடைக்கும் போது சாப்பிட்டு வர வேண்டும். எமது பிரதேசத்தில் பரம்பல் அதிகம் காணப்படுகிறது. எனவே கிடைக்கும் போது தாராளமாக பயன்படுத்தி வர நோய் எதிர்ப்பாற்றலும் அதிகரிக்கும்.

# 'உலக வறுமை சுட்டி' சுட்டிநிற்கும் எம் தேசத்தின் நிலை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமது தேசம் என்றுமில்லாதவாறு பொருளாதார வீழ்ச்சியைக் கண்டிருக்கின்றது. பலவழிகளைத் தேடினாலும் மக்களிடமிருந்து பலவகையான வரிகளை விதித்தாலும் வீழ்ந்த பொருளாதாரத்தை நிமிர்த்தி எம்மை ஒரு அபிவிருத்தியடைந்த நாடாக அறிவிப்பதற்கு இன்னும் 26 ஆண்டுகள் தேவைப்படும் என எதிர்வுகூறப்பட்டிருக்கின்றது.

அதாவது 2048 ஆம் ஆண்டளவில் தான் இலங்கை முழு அளவில் அபிவிருத்தியடைய முடியும் என்றான கணிப்புக்களை நாமெல்லோரும் நன்றாக உற்று அவதானிக்க வேண்டும்.

கொவிட் 19 பல நாடுகளை உலுக்கியெடுத்திருக்கின்றது. நம் நாடும் இதிலிருந்து தப்பிக்க வழிகளிருந்தும் நாம் அதில் தவறிவிட்டோம் என்றே கருதப்படுகின்றது.

அவ்வப்போது செய்திருக்க வேண்டிய வரிவிதிப்புக்களை வசதிக்கேற்ப இலகுபடுத்திய தன் காரணமாகவும் அரச இருப்பு காலாவதியாவதனை கணக்கிலெடுக்கத் தவறியமையும் எம்மை இவ்வாறான வீழ்ச்சிக்குள் சிக்கித் தவிக்க விட்டுள்ளது. முறையான பொருளாதார கட்டமைப்புடனான செயற்றிட்டங்களுடன் நகர்ந்த எமது நாட்டின் பொருளாதாரத்தில் இவ்வாறான விழுக்காடு ஏற்பட்டதனை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத நிலையில் தற்போது விழுந்த பொருளாதாரச் சுமை அன்றாடம் வேலை செய்து பிழைப்பவர்களையும் விவசாய பெருமக்களையும் வறுமைக் கோட்டிலிருக்கும் மக்களையும் குறிப்பாக எந்தவிதமான வருமானமுமின்றி பெண் தலைமைத்துவத்தை கொண்டியங்கும் குடும்பங்களை பாரியளவில் பாதித்திருக்கின்றது. இன்னமும் பாதித்துக் கொண்டிருக்கின்றது. சராசரியாக மாதாந்தம் எண்பதினாயிரம் ஊதியமாக அல்லது வருவாயாக பெறும் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு இத்தொகை தற்போதய காலகட்டத்தில் மெல்லும் வாய்க்கு எள்ளுப்பொரி போல இருக்கின்றது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையுயர்வு அனைத்து மக்களையும் வெகுவாகப் பாதிக்கின்ற நிலையில் அவர்களுக்கான பொருளாதாரத் தேவைகள் இன்னும் பலமடங்கு அதிகரிக்க வேண்டியிருக்கும் போது வரிவிதிப்புக்கள் பலவகைகளில் பலவாறாக அனைவரையும் இதுவரையும் கண்டிராத பேரிடர் தாக்கத்தின் முழு வடிவத்திற்குள் சிறைப்பிடித்திருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. வரிவிதிப்பு தனிநபருக்கானதாக மாற்றமடையும் போது இன்னும் இது பலரையும் குடும்பங்களையும் பொருளாதார சிக்கலுக்குள் இழுத்துச் செல்லும். இதிலிருந்து மீள்வதென்பது தற்போதெழுந்துள்ள மிகப் பெரிய சவால் என்பதை புரிந்து கொண்டால் இத்தேசத்து மக்கள் அனைவரும் இப்போதாவது ஒற்றுமையாக வர்க்க இன, சாதி, மத பேதங்களை மறந்து ஒன்றிணைந்து இத்தேசத்து மக்களைக் காப்பாற்றுவதற்கான வழிமுறைகளை சிந்தித்து செயற்படல் வேண்டும். அத்தியாவசியமற்ற செலவுகள் எதுவென்றாலும் அதனை தவிர்ப்பது அவசியமானதும் புத்திசாலித்தனமானதுமாகும்.

இந்நிலையில் மக்களுக்கு அவசியம் தேவையான உணவை இருக்கின்ற வசதி

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




வாய்ப்புக்களை கணக்கில் கொண்டு உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகும். காலத்திற்கேற்ற போகங்களெல்லாம் மழைவீழ்ச்சியின் மாறுபடும் தன்மைக்கேற்ப மாறுபடத் தொடங்கியதன் விளைவுகளை நாம் தற்போது உணரத் தலைப்படுகின்றோம் அல்லவா. ஆதலினால் காலந்தப்பிய பயிர்ச்செய்கைக்குள்ளும் தங்களை ஈடுபடுத்தி அதிலிருந்து கிடைக்கக்கூடிய இலாபத்தைப் பெற முனைகின்றனர்.

இது பொதுவான பரிந்துரையாக இல்லாவிடினும் சம காலகட்டத்திற்கான தேவை என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும்.

2022 ஆம் ஆண்டுக்கான உலக வறுமை சுட்டி (Global Hunger Index) வெளிவந்திருக்கின்றது. இதில் இலங்கை 112 நாடுகளில் 64 ஆவது இடத்திலிருக்கின்றது. இந்த நிலை 2019 ஆம் ஆண்டிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிலும் பெரிய மாற்றங்களுடன் இல்லாது அதேயிடத்தில் இருக்கின்றதனைக் காணலாம்.

இதிலிருந்து எமது தேசத்தின் உற்பத்தி எமது மக்களுக்கான அவசியமான உணவை வழங்குவதற்கு போதுமானதாக இருக்கும் என எதிர்வு கூறுகின்றனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வவுனியா ஓமந்தையில்

# பயிர்ச்செய்கைக்குரிய நிலத்தில் வனவளத் திணைக்களத்தால் மரநடுகை

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

**வவுனியா, ஓமந்தைப் பகுதியில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள தயார்படுத்தப்பட்ட மேட்டு நிலத்தை வனவளத் திணைக்களத் தின் காடாக்குவதற்காக மீள் மரநடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.**



மக்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கமைய பயன்படுத்தப்ப டாத தமது நெல் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை நிலங்களை அதிக பண த்தை செலவு செய்து மீள துப்புரவு செய்து தற்போது காலபோக செய்கைக்கு தயார்ப் படுத்தியுள்ள நிலையில், அப்பகுதிக்குச் சென்ற வனவளத் திணைக்களத் தினர் குறித்த நிலங்களை மீள காடா க்குவதற்கான மீள்மரநடுகை வேலை த்திட்டத்தினை முன்னெடுத்துள்ள னர்.

அப்பகுதியில் பரம்பரையாக மேட்டு நிலப் பயிர்ச்செய்கை செய்து வந்த காணி யின் ஒரு பகுதியில் மீள் மரநடுகை மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலும் மரநடு கையை மேற்கொள்வதற்காக அப்பகுதி யில் மரக்கன்றுகளையும் கொண்டு வந்து வைத்துள்ளனர்.

இதன் காரணமாக குறித்த காணிக ளில் பெரும்போகத்தில் பயிர்ச்செய் கையை மேற்கொள்ள முடியாத நிலை யில் உள்ளதாக செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-250)



கேதார கௌரி விரத இறுதி நாளான நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (படம்:-சிவசாந்தன், கஜிந்தன்)

# வீதி மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு நல்லூர் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகள், சுவாமி வீதியுலா வருதல் காரணமாக இன்று தொடக்கம் 29 ஆம் திகதி வரை மாலை வேளைகளில் பி.ப 5 மணி தொடக்கம் 6 மணிவரை யிலும் சூரன் போர் திருவிழாவான 30 ஆம் திகதி பி.ப 12 மணி தொடக்கம் பி.ப 6 மணி வரையிலும் 31 ஆம் திகதி மாலை பி.ப 5 மணி தொடக்கம் 6 மணி வரையும் ஆலய சுற்றாடலில் வாகனம் நுழைய முடியாதவாறு பாதைகள் மூடப் பட்டிருக்கும். இந்நேரங்களில் மாத்திரம் வாகனங் கள் ஆலயச் சுற்றாடலினைத் தவிர்த்து வழமையான மாற்றுப் பாதை களூடாக பயணிக்க முடியும் என யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணி வண்ணன் அறிவித்துள்ளார். (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: சூரி 3, செவ் 1 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: O/L பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13068 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 14 சூரி 4, செவ் 6 இல்<br>உயரம்: 158 cm<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13080 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 39 சூரி 11 செவ் 2 இல்<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்: படவரைஞர் தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13069 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: சூரி 7 செவ் 6 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: BIT Software engineer<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி<br>தொ.இ: G/13091 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா : சூரி, செவ் 12 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: MBBS,LLB பட்டதாரி (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண், லண்டனில் பிறந்தவர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13070 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா : 39 1/2 சூரி 7 செவ் 3 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/13092 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: சூரி, செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:AIL ஜேர்மனி PR இல்லை<br>எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாட்டு பெண்<br>தொ.இ: /13071 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 40 சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்:AAT<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/13094 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# கனகராயன் ஆற்றுப்பகுதி துப்புரவு பணி ஆரம்பம்



(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட கனகராயன் ஆற்றுப் பகுதியை துப்புரவு செய் யும் செயற்றிட்டம் நேற்று கிளி நொச்சி மாவட்ட அரச அதிபர் றூபாவதி கேதீஸ்வரனால் ஆர ம்பித்து வைக்கப்பட்டுள்ளது

அதிக நீர் நிலைகளைக் கொண்ட மாவட்டமாக காணப் படுகின்ற கிளிநொச்சி மாவட்ட த்தில் மழை காலங்களில் வெள் ளப்பெருக்கு காரணமாக பல் வேறுபட்ட பாதிப்புகள் ஏற்படு கின்றன. அவ்வாறான பாதிப்பு களை குறைக்கும் வகையில் நீர் வழிந்தோடக்கூடிய கழிவு வாய் க்கால்கள், ஆறுகள் என்பவ ற்றை துப்புரவு செய்யும் வேலை த்திட்டங்களை நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அன ர்த்த முகாமைத்துவப் பிரிவு என்பவற்றால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. (4-315)


## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர் பட்டியல் தொடர்பான அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான 30.09.2022ம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர்களின் பெயர் விபரம் அடங்கிய வாக்காளர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும், இயங்காத கிளைகளின் பட்டியல் சங்க தலைமை காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகின்றோம்.

**வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களின் விபரம்:-**

| கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் | கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
| --- | --- | --- | --- |
| கிளை -01 | -கிளை நிலையம் -01 | கிளை -16 | -சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் |
| கிளை -02 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -17 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -03 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -18 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -04 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -19 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -05 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -20 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -06 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -21 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -07 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -22 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -08 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -23 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -09 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -23A | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -10 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -24 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -11 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -25 | -ஏழாலை கிராமிய வங்கி |
| கிளை -12 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -26 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -13 | -இணுவில் கிராமிய வங்கி | கிளை -28 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -14 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -29 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -15 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை -30 | -சங்க தலைமை காரியாலயம் |

**இவ் வாக்காளர் பட்டியல் 26.10.2022ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 11.11.2022 ஆம் திகதி வரை மேற்குறிப்பிட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி வாக்காளர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் எதிர் வரும் 11.11.2022 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். பின்னர் வரும் ஆட்சேபனைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

26.10.2022 (C-5141)

செயலாளர்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்(வ-து)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 105

# மகிழ்ச்சியாக வாழ்வோம்



அரண்மனையை ஒட்டி வசித்த யாசகன் ஒருவர், அரண்மனையில் மன்னர் விருந்தளிக்கப் போவதாகவும் அரச உடையில் வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்று அரண்மனை வாயிற்கதவில் குறிப்பிடப்பட்டிருந்ததை கண்டார்.

யாசகன், தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டார். நிச்சயமாக அரச குடும்பத்தினர் மட்டுமே ராஜ உடையை அணிய முடியும் என எண்ணினார்.

இருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அரண்மனை வாசலை அடைந்தார்.

வாயிற்காவலனிடம், "ராஜாவைப் பார்க்க வேண்டும்" என்றார். அந்தக் காவலன், அரசரிடம் அனுமதி வாங்கி வந்தான். உள்ளே வந்த யாசகனிடம், "என்னைப் பார்க்கவேண்டும் என்றாயாமே?" என்றார் அரசர். "ஆமாம்! நீங்கள் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள எனக்கும் ஆசை. ஆனால், என்னிடம் ராஜ உடைகள் இல்லை. என்னை அதிகப்பிரசங்கி என நினைக்கா விட்டால், உங்களது பழைய ஆடைய்ய அளித்து உதவினால், அதனை அணிந்து கொண்டு விருந்துக்கு வருவேன்" என்று கூறிய யாசகன், அதே நேரம் மன்னர் என்ன சொல்வாரோ என நடுங்கியபடி, அவரையே பார்த்துக் கொண்டிருந்த வேளை மன்னர், அவருக்கு ராஜ உடை ஒன்றை வழங்கினார். அந்த உடையை உடுத்திக் கொண்டு கண்ணாடி முன் நின்று தன் தோற்றத்தில் கம்பீரம் மிளிர்வதைக் கண்டு வியந்தார்! அப்போது மன்னர் அவரிடம், "விருந்தில் கலந்து கொள்வதற்குத் தகுதி உடையவனாகி விட்டாய். அதைவிட, முக்கியமான ஒன்று...

இனி உனக்கு வேறெந்த உடையும் தேவைப்படாது. உன் ஆயுள் முழுவதும் இந்த உடை அப்படியே இருக்கும். துவைக்கவோ தூய்மைப்படுத்தவோ அவசியம் இருக்காது" என்றார். கண்ணீர்மல்க, மன்னருக்கு நன்றி கூறி விட்டுக் கிளம்ப எத்தனித்தவர், மூலையில் கிடந்த தனது பழைய ஆடைகளைக் கவனித்தார்.

தந்த உடைகள் கிழிந்து விட்டால்... அப்போது நமக்குப் பழைய உடைகள் தேவைப்படுமே? என யோசித்தவர், சட்டெனச் சென்று தன் பழைய உடைகளை வாரி எடுத்துக் கொண்டார்.

வீடு வாசல் இல்லாத அவரால் பழைய துணிகளை எங்கேயும் வைக்க முடியவில்லை. எங்கே போனாலும் பழைய ஆடைகளையும் சுமந்தே திரிந்தார். மன்னர் அளித்த இரவு விருந்தையும் அவரால் மகிழ்ச்சியாக ஏற்க முடியவில்லை.

அரசர் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவருக்குப் புரிந்தது. அவர் கொடுத்த ஆடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. ஆனாலும், அந்த யாசகனுக்குப் பழைய உடைகள் மீது நாளுக்கு நாள் ஆசை அதிகமானது. மக்களும் அவரது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த கந்தல் மூட்டையையே பார்த்தனர். அவரைக் "கந்தல் பொதி கிழவன்" என்றே அழைத்தனர். இறக்கும் தருணத்தில் இருந்த அவரைப் பார்க்க அரசர் வந்தார். அவரது தலைமாட்டில் இருந்த கந்தல் மூட்டையைப் பார்த்து, அரசரின் முகம் சோகமாவதைக் கண்டான். ஆரம்பத்திலேயே அரசர் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது.

பழைய துணி மூட்டை, அவரது வாழ்நாளின் மொத்த மகிழ்ச்சியையுமே பறித்து விட்டது. அந்த யாசகனிடம் மட்டுமல்ல, நம் எல்லோரிடமும் அப்படியொரு மூட்டை இருக்கிறது.அதனுள் விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை... எனப் பல பெயர்களில் வேண்டாத பொருட்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துவதால், நமது வாழ்வில் வீசுகின்ற மகிழ்ச்சித் தென்றலை நுகர முடியாமல் இருக்கிறோம்.

# அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைகளால் நாட்டை விட்டு வெளியேறும் தொழில் வல்லுநர்கள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டிலிருந்து தொழில் வல்லுநர்களின் இடம்பெயர்வு அதிகரித்து அது சுகாதாரம் மற்றும் பிற துறைகளை அதல பாதாளத்தில் தள்ளக்கூடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

எனவே, இவ்வாறான நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலமாக அறிவிக்க அந்தச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே, வரிக்கொள்கையில் திருத்தங்களை சமர்ப்பிக்கும் பாரிய பொறுப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் உள்ளதாக தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளின் அழுத்தம் காரணமாகவே இந்த வகையான வரிக் கொள்கைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது என்பது பகுப்பாய்வு செய்த பலரின் கருத்தாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வரிக் கொள்கைகளின் விளைவாக பல மருத்துவர்கள், கணக்காளர்கள், பொறியாளர்கள் எனப் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் உள்ள ஏனைய மருத்துவமனைகளில் இந்த நிலைமை மோசமாக உருவாகி வருகிறதென்றும் பெரும்பாலான சிறப்பு மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இதனால், பெரும்பாலான மருத்துவமனைகள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# எடை குறைந்த பாண் விற்பனை; 100 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## நுகர்வோர் அதிகாரசபை அதிரடி

(கொழும்பு)

எடை குறைந்த பாண் விற்பனையில் ஈடுபட்ட 100 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எடை குறைந்த பாண் விற்பனை செய்வோர் தொடர்பில் நாடளாவிய ரீதியில் திடீர் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த கிரியெல்ல குறிப்பிட்டார்.

ஒரு இறாத்தல் பாணின் எடை 450 கிராமாக உள்ள நிலையில், குறைவான எடையுடைய பாணை விற்பனை செய்யும் சில்லறை வியாபாரிகளுக்கு 1,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த விற்பனையில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு 10,000 ரூபாய் முதல் 100,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, அதிக விலையில் பாண் விற்பனை செய்வோர் தொடர்பில் 1977 என்ற துரித தொலைபேசி இலக்கத்தினூடாக அதிகார சபைக்கு முறைப்பாடு செய்யுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை, பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

# பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து-40 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு பிரதான வீதியின் மாவனெல்லை - உத்துவான் கந்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

தனியார் பேருந்து ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்கள் மாவனெல்லை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

# தடைப்பட்ட வட்ஸ்அப் செயலி இயல்பு நிலைக்கு திரும்பியது

(கொழும்பு)

இலங்கை, இந்தியா உட்பட்ட பல நாடுகளில் வட்ஸ்அப் செயலியில் தடங்கல் நிலை ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாக வட்ஸ்அப் ஊடாக தொடர்புகளை ஏற்படுத்த முடியாமல் இருந்ததாக பயனர்கள் தெரிவித்துள்ளனர்.

வட்ஸ்அப் செயலியின் மத்திய பரிமாற்ற கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்ப பிரச்சினையே இதற்கு காரணம் என மெட்டாவின் பேச்சாளர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கட்டமைப்பில் ஏற்பட்டிருந்த பாதிப்பை சரி செய்து வட்ஸ்அப் மீளமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 11





அவர்களிடம் காட்டுவதுதானே!" என்று குத்திக் காட்டினான்.

வந்தியத்தேவனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்தது. எனினும் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்தான். பழுவூர் வீரர்கள் பெருங்கூட்டமாயிருந்தனர். அவ்வளவு பேருடன் ஒரே சமயத்தில் சண்டைக்குப் போவதில் பொருள் இல்லை. அவர்கள் இவனுடன் சண்டை போடுவதற்காகக் காத்திருக்கவும் இல்லை. குதிரை ஓடியதைப் பார்த்துச் சிரித்து விட்டு, அவர்களும் விரைந்து மேலே நடந்தார்கள். குதிரை போன திசையை நோக்கி வந்தியத்தேவன் சென்றான்.

அது கொஞ்ச தூரம் ஓடி விட்டுத் தானாகவே நின்று விடும் என்று அவனுக்குத் தெரியும். ஆகை யால் அதைப் பற்றி அவன் கவலைப் படவில்லை. பழுவேட்டரையரின் அகம்பாவம் பிடித்த ஆட்களுக்கு புத்தி கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் உள்ளத்திதல் அழுத்தமாகப் பதிந்தது.

புளியந்தோப்புக்கு அப்பால், ஜன சஞ்சாரமில்லாத இடத்தில் குதிரை சோகமே வடிவாக நின்று கொண்டிருந்தது. வந்தியத்தேவன் அதன் அருகில் சென்றதும், குதிரை கனைத்தது. 'ஏன் என்னை விட்டுப் பிரிந்து சென்று இந்தச் சங்கடத்துக்கு உள்ளாக்கினாய்?' என்று அந்த வாயில்லாப் பிராணி குறைகூறுவது போல் அதன் கனைப்புத் தொனித்தது.

வந்தியத்தேவன் அதன் முதுகைத் தட்டிச் சாந்தப்படுத்தலானான். பிறகு அதைத் திருப்பி அழைத்துக் கொண்டு சாலைப்பக்கம் நோக்கி வந்தான். திருவிழாக் கூட்டத்தில் இருந்தவர்கள் பலரும் அவனைப் பார்த்து, "இந்த முரட்டுக் குதிரையை ஏன் கூட்டத்தில் கொண்டு வந்தாய், தம்பி! எத்தனை பேரை அது உதைத்துத் தள்ளி விட்டது?" என்றார்கள்.

"இந்தப் பிள்ளை என்ன செய்வான்? குதிரைதான் என்ன செய்யும்? அந்தப் பழுவேட்டரையரின் முரட்டு ஆட்கள் அல்லவா இப்படிச் செய்துவிட்டார்கள்?" என்று இரண்டொருவர் சமாதானம் சொன்னார்கள்.

ஆழ்வார்க்கடியான் இன்னமும் சாலையில் காத்துக் கொண்டு நின்றான். "இதேதடா சனியன்? இவன் நம்மை விடமாட்டான் போலிருக்கிறதே!" என்று எண்ணி வந்தியத்தேவன் முகத்தைச் சுளுக்கினான்.

"தம்பி! . நீ எந்தப் பக்கம் போகப் போகிறாய்?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"நானா? கொஞ்சம் மேற்குப் பக்கம் சென்று, பிறகு தெற்குப் பக்கம் திரும்பி சிறிது கிழக்குப் பக்கம் வளைத்துக் கொண்டு போய் அப்புறம் தென் மேற்குப் பக்கம் போவேன்!" என்றான் வந்தியத்தேவன்.

"அதையெல்லாம் நான் கேட்கவில்லை. இன்று ராத்திரி எங்கே தங்குவாய் என்று கேட்டேன்." "நீ எதற்காக அதைக் கேட்கிறாய்?"

"ஒருவேளை கடம்பூர்ச் சம்புவரையர் அரண்மனையில் நீ தங்குவதாயிருந்தால் எனக்கு அங்கே ஒரு வேலை இருக்கிறது..." "உனக்கு மந்திரதந்திரம் தெரியுமா, என்ன? நான் கடம்பூர் அரண்மனைக்குப் போகிறேன் என்பதை எப்படி அறிந்தாய்?"

"இதில் என்ன அதிசயம்? இன்றைக்குப் பல ஊர்களிலிருந்தும் பல விருந்தாளிகள் அங்கே வருகிறார்கள். பழுவேட்டரையரும் அவர் பரிவாரமும் அங்கேதான் போகிறார்கள்."

(தொடரும்...)

குதிரை, திருநாள் கூட்டத்துக்கிடையே புகுந்து ஓடிற்று. ஜனங்கள் அதன் காலடியில் மிதிபடாமலிருப்பதற்காகப் பரபரப்புடன் அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டார்கள். அப்படியும் அவர்களில் சிலர் உதைபட்டு விழுந்தார்கள். குதிரை நெறிகெட்டு வெறி கொண்டு ஓடியது.

இவ்வளவும் வந்தியத்தேவன் கண்ணெதிரே அதி சீக்கிரத்தில் நடந்து விட்டது. அவனுடைய முகத்தோற்றத்திலிருந்து குதிரை அவனுடைய குதிரை என்பதை ஆழ்வார்க்கடியான் கண்டு கொண்டான்.

"பார்த்தாயா, தம்பி! அந்தப் பழுவூர்த் தடியர்கள் செய்த வேலையை! என்னிடம் நீ காட்ட வந்த வீரத்தை

# ஒக்டோபர் வாசிப்பு மாதம்

## வீட்டிற்கொரு நூலகம் அமைப்போம்

அவசர கதியில் இயங்கிக் கொண்டிருக்கும் மனித வாழ்க்கையின் ஊடே-நமக்கு முழுக்க முழுக்க தேவையான பல நிறைவு தரும் விடயங்களை நாம் கைக்கொள்வதில்லை. நமக்கு அசியமானதும் முதன்மையானதுமான விடயங்களை கைவிட்டு அவசியமற்ற விடயங்களிலே கவனம் செலுத்துகின்றோம். அந்த வகையில் நமக்கு அவசியமானதும் முதன்மையானதுமான கைவிட்ட விடயங்களில் ஒன்றாகவே நூலகம் உள்ளது.

பகல் தொடக்கம் இரவு வரை நாம் அனைவரும் வாழ்க்கையின் தேவையை நோக்கியே பயணம் செய்கிறோம். யாராவது அறிவின் தேவையை நிறைவேற்றுகின்றோமா? இல்லை. காரணம் சற்று ஓய்வு கிடைத்ததும் தொலைக் காட்சிக்குள் நாம் அனை வரும் தொலைந்து விட்டோம். இதுவே நாம் நமது வீட்டுக்குள் ஒரு நூலகம் அமைத்து வைத்திருப் போமேயாயின் நம் பொழுது போக்காக அதனைப் பயன்படுத்துவோம்.

நம் அனைவரினதும் வீட்டில் நூலகம் இருக்க வேண்டும். அதில் அறிவு தரும் பல சிந்தனையான நூல்களையும் பெரிய பெரிய மகான்களினுடைய வாழ்க்கை வரலாற்றினையும், இலக்கியங்கள் மற்றும் திருக்குறள் எனப் பலவகையான புத்தகங்களை வைத்து அதனை நாம் பயன் படுத்துவது மட்டுமல் லாது எமக்கு பின்னால் வரும் அடுத்த சந்ததியினரும் பயன் படுத்தும் வகையில் அமைக்க வேண்டும்.

"நூல் பல கல்" என்றார் ஔவை மூதாட்டி. அதாவது நாம் நமது சிறுபராயத்திலிருந்து பல நூல்களை கற்று வந்தோமேயானால் நம் அறிவு வளர்சியடையும். பாடப்புத்தகத்தை மட்டும் கற்பது அறிவு அல்ல. நமக்கு நல்ல சிந்தனைகள் தரும், அறிவு, சிறந்த, வாழ்கைக்கு ஏற்ற கதைப் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் எனப் பலவற்றை கற்று வந்தோ மேயானால் நம் மூளை வளர்ச்சியடையும்.

"வீட்டிற்கு ஒரு நூலகம் அமைக்கும் காலமே அறிவின் பொற்காலம்" என நூலகத்தின் சிறப்புப் பற்றி ஒரு அறிஞர் கூறுகிறார். ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது போல நூலகம் சென்று நூல்கள் கற்பதும் மிகவும் நன்றாகும். ஒவ்வொருவர்



வீட்டிலும் தனித்தனி நூலகம் இருக்க வேண்டும் என முன்னால் ஜனாதிபதியும் அறிவியல் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் கூறுகின்றார்.

நாம் ஒவ்வொரு நாளும் கொஞ்சக் கொஞ்ச பணம் சேர்த்து ஒவ்வொரு ஒவ் வொரு புத்தகமாக வாங்கி சேர்த்து வந்தோமேயானால் அது நாளடைவில் ஒரு புத்தக நூலகமாகவே அமைந்து விடும்.

நாம் நமது வீட்டின் உள்ளே ஒரு அறையை நூலுகத்திற்காகவே ஒதுக்கி நிறைய நிறையப் புத்தகங்களை சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை அனைவரும் பயன்படுத்தக்கூடிய வகையில் மிகவும் அழகாக அடுக்கி வைக்க வேண்டும்.

நூலகத்தின் அவசியத்தை நாம் உணரு வது மட்டும் அல்லாது எமது நண்பர்களும் உணரும் வகையில் அவர்களுக்கும் கூற வேண்டும். நூலகம் வீடுகளில் இருப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆகவே நம் அனைவரினதும் வீடுகளிலும் வீட்டிற்கு ஒரு நூலகம் அமைத்து அதன் நன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிடம் அறிவொளி இருந்தால் அந்த தீபத்திலிருந்து மற்றவர்கள் மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொள்ளட்டும்.

– கார்ல் மார்க்ஸ்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## உயர்ந்த எண்ணங்களை மாணவர்களிடம் விதைப்போம்!

நீ எதை நினைக்கின்றாயோ அதுவாகவே நீ ஆகிறாய்... என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆம் நல்ல சிந்தனைகள், உயர்ந்த எண்ணங்கள் உன்னை உயர்ந்தவனாக ஆக்குகிறது என்பதுதான் சுவாமி விவேகானந்தரின் முடிவு.

அதாவது நேர்க்கணிய சிந்தனைகள் எப்போதும் நேரிய விளைவுகளைத் தரும்.

எனினும் அண்மைக்காலமாக வடபுலத்து மாணவர்கள் குறித்து எதிர்மறையான தகவல்களே வெளிவந்தவண்ணமுள்ளன.

போதை மாத்திரை வைத்திருந்திருந்த மாணவன் கைது, வடபகுதி மாணவர்களிடையே போதைப் பாவனை அதிகரித்து விட்டது.

போதைக்கு அடிமையான என் மகனைத் திருத்தித் தாருங்கள் என்று பொலிஸாரிடம் கேட்ட தாய்.

போதைக்கு அடிமையான இளைஞன் உயிர்மாய்ப்பு என்றவாறான செய்திகள் மாணவர்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருகின்றோம்.

உதாரணத்துக்கு போர்க்கால சூழலில் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைக்கள்; செய்தித்தாள்களில் இடம்பிடித்துவிட, சுட்டுக்கொல்லப்படுகின்ற சம்பவங்கள் மக்கள் மத்தியில் சர்வசாதாரணமாகிப் போயின.

கொலை என்றாலே இதயம் பதறக்கூடிய மனிதநேயத்தோடு இருந்த நம் வடபுலத்து மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை எடுத்தனை.

இன்று எவரும் சுட்டுக்கொல்லப்படவில்லையா? என்று கேட்கின்ற அளவில் மனவக்கிரத்துக்கு ஆளாகிப் போயினர்.

அதிலும் குறிப்பாக இளம் சமூகம் கொலைச் சம்பவங்களைச் சர்வசாதாரணமாக எடுத்துக் கொண்டது.

இதன் விளைவு வீதி விபத்துக்களின் போது அடிபட்டு உயிருக்காகப் போராடுகின்றவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று காப்பாற்ற நினைக்காமல், விரைந்து செயற்பட்டு கையடக்கத் தொலைபேசியில் படம் எடுத்து அதனை முகநூலில் பதிவேற்றம் செய்கின்ற மிருகத்தனத்துக்கு நம் இளம் சமூகம் ஆளாகியுள்ளது.

ஆக, இப்போதும் எதிர்மறைச் செய்திகள் எங்கள் மாணவர்களை வெறுப்புக்கு ஆளாக்கி விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

ஆகையால் எங்கள் மாணவர்களை வழிப்படுத்தக்கூடியதான தகவல்களுடன் நன்றையும் தீதையும் உணர்த்துகின்ற நுட்பத்தைப் பின்பற்ற வேண்டும்.

அத்தோடு எங்கள் வடபுலத்து மாணவர்களின் உயர்பரீட்சைப் பெறுபேறுகள் உச்சமடைந்துள்ளதென்பதையும் எம் மாணவர்கள் கல்வியில் சாதனை படைத்து வருகின்றனர் என்ற பெருமையையும் நாம் அடிக்கடி வெளிப்படுத்துவது மாணவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமையும்.

ஆகையால் இது விடயத்தில் பொறுப்பு வாய்ந்த அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்வோம்.

## சமூக செயற்பாட்டாளர் தாக்கப்பட்டமைக்கு வேலணை பிரதேச சபை தவிசாளர் கண்டனம்

(வேலணை)

மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் கருசனை கொண்டு செயற்பட்ட வேலணை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சிவநேசன் இனந்தெரியாதவர்களால் தக்கப்பட்ட சம்பவத்திற்கு வேலணை பிரதேச சபை தவிசாளர் ந.கருணாகரமூர்த்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வேலணைப் பகுதியில் போதைவஸ்து பாவனை மற்றும் சட்டவிரோத செயல்களை தடுக்கும் பணியில் ஈடுபட்ட சிவநேசன் கடந்த 23 ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுஇருந்தார்.

இது தொடர்பிலேயே வேலணை பிரதேச சபை தவிசாளர் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்களை பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுள்ளார். (ம)

### மக்களை நடுத்தெருவில் தள்ளிவிட்டு

## தனது குடும்பத்தை வளர்க்கும் செயற்பாட்டில் ரணில், ராஜபக்ஷ அரசு

### ஹிருணிகா பிரேமச்சந்திர

(கொழும்பு)

மக்களை நடுத்தெருவில் தள்ளிவிட்டு, தனது குடும்பத்தை வளர்க்கும் செயற்பாட்டை ரணில் ராஜபக்ஷ அரசு முன்னெடுக்கிறது என, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டையும் மக்களையும் அரசு அடக்கி ஆள்கிறது. மக்களை நடுத்தெருவில் தள்ளிவிட்டு அடக்க முனைகிறது. நாட்டை நாசம் செய்கிறது. கோட்டாபய குடும்பத்துக்கு சேவை செய்கிறது. இது தான் ரணில் அரசின் சேவை.

நாட்டை மீட்டெடுத்த மக்களை நடு வீதியில் தள்ளி, மாணவத் தலைவர்களையும் மதத் தலைவர்களையும் கைது செய்து சிறையில் தள்ளியுள்ளது. இதை இப்படியே விடப் போவதில்லை. இதற்கு முற்று புள்ளி விரைவில் வைப்போம்.

மற்றுமொரு மக்கள் அலையை நவம்பரில் இருந்து ஆரம்பிப்போம். இதற்கான முதல் கட்டம், கொழும்பில் எதிர்வரும் வரும் மாதம் 2 ஆம் திகதி தெரியும்.

நாட்டு மக்களை ஏமாற்ற முடியாது. சிறையில் தள்ள முடியாது .இந்த அரசுக்கு சரியான பாடம் புகட்டுவோம். பயங்கரவாத தடைச் சட்டம் உடன் நீக்கபட வேண்டும். கைது செய்யபட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள், போராட்ட உறுப்பினர்கள், தேரர் உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றார். (ம-7)

## 18 வயது மாணவி வன்புணர்வு 19 வயது இளைஞன் கைது

(கொழும்பு)

18 வயது யுவதியொருவரை வன்புணர்வு செய்த குற்றத்தில் 19 வயது காதலனை கைது செய்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும் மனநல பிரிவு விடுதியில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட பெண் கடந்த ஜூன் மாதம், சந்தேகநபருடன் காதல் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தாகவும், ஒரு மாதத்தின் பின் சந்தேகநபர் குறித்த யுவதியை பாணந்துறையில் உள்ள நண்பனின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் ஒரு கிண்ணத்தில் எதையோ கலந்து யுவதிக்கு குடிக்க கொடுத்ததாகவும், அப்போது யுவதி பாதி மயக்கமடைந்ததாகவும், பின்னர் காதலன் யுவதியுடன் தகாத உறவில் ஈடுப்பட்டதாகவும் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம், சந்தேகநபரான காதலன், யுவதியின் தனிப்பட்ட காணொளிகளை காண்பித்து, அவற்றை பகிரங்கப்படுத்துவதாக கூறி, பல முறை யுவதியை மிரட்டி, பாலியல் உறவுக்கு சம்மதிக்க கோரியுள்ளார்.

சில மாதங்களில் பின் சந்தேகநபர் யுவதியுடன் தொடர்பை முறித்துக்கொண்டதால் யுவதி வீட்டை விட்டு வெளியேறி நெருங்கிய உறவினர் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றை கூறியுள்ளார்.

யுவதி வழங்கிய வாக்குமூலத்தையடுத்து சந்தேகநபரை பாணந்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## யாழில் பாவனைக்கு உதவாத 6 ஆயிரம் கிலோ பழப்புளி மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில் மனித பாவனைக்கு உதவாத பெருந்தொகையான பழப்புளியை பொதியிடப்பட்டுக்கொண்டிருந்த களஞ்சியசாலை ஒன்று பொது சுகாதார பரிசோதகரால் முற்றுகையிடப்பட்டு 6 ஆயிரம் கிலோ பழப்புளி மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.நகரை அண்டிய பகுதியில் உள்ள களஞ்சிய சாலை ஒன்றில் சுகாதார மற்ற முறையில் பாவனைக்கு உதவாத பழப்புளி பொதியிடப்படுவதாக யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதகருக்கு இரகசிய தகவல் நேற்று செவ்வாய்க்கிழமை கிடைக்கப்பெற்றது.

அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொது சுகாதார பரிசோதகர், பாவனைக்கு உதவாத, சுகாதாரமற்ற முறையில் சேமிக்கப்பட்டு பொதியிடப்பட்டுக்கொண்டிருந்த 6 ஆயிரம் கிலோ பழப்புளியை மீட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை- கரந்தன், அரசகேசரி பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி, கரந்தன், மாலை வைரவர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவில் Maravanpulo wind power plant ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கனகராயங் குளம் சந்தி, கனகராயங் குளம் ஆலங்குளம் (புது விளான்), கறுப்புக்குத்தி இராணுவ முகாம், குறிசுட்டான் குளம், பரசங்குளம், புதூர் கோவிலடி, புத்தூர் கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், புதுவிளாங்குளம் சிவன் கோவில், விக்னகுளம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பை குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## குடும்பத் தகராறு; பெண் உயிரிழப்பு

கல்குடா பொலிஸ் பிரிவில் குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற கைகலப்பில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாடசாலை வீதி பட்டியடிச்சேனையைச் சேர்ந்த த.காந்திமதி வயது (67) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

24 ஆம் திகதி தீபாவளி தினமன்று உயிரிழந்தவரின் வீட்டிற்கு சென்ற இளைய சகோதரி மற்றும் அவரது மகன் ஆகியோர் உயிரிழந்தவரின் மகனுடன் ஏற்பட்ட முரண்பாடு கைகலப்பாக மாறியதினால் இருசாராரும் ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் மேற்கொண்டதனால் இதன்போது இவர் உயிரிழந்துள்ளதாக விசாரணையின்போது தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மட்டக்களப்பு மாவட்ட தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. கல்குடா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 107

கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளைப் பயன்படுத்தி கருங்கடலில் உள்ள ரஷ்யப் போர்க்கப்பலைக் குறிவைத்து தாக்கும் முடிவு உக்ரைனின் தனிப்பட்ட முடிவு எனவும் இருப்பினும் கப்பல்களின் இருப்பிடங்கள் உட்பட பலவிதமான உளவுத்துறையை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கியுள்ளதாகவும் அமெரிக்க அதிகாரி தெரிவித்திருந்தார்.



மோஸ்க்வா போர்க்கப்பல்

இந்நிலையில், ரஷ்யாவின் முக்கிய ஊடகமான ரஷ்யா 1 தொலைக்காட்சி, இப்போது நடப்பது உக்ரைனுக்கு எதிரான போர் இல்லை. நேட்டோ நாடுகளுக்கு எதிரானதாக மாறிவிட்டது. அப்படியெனில், இது நிச்சயம் மூன்றாம் உலகப்போர் தான் என கூறியுள்ளது.

தொகுப்பாளர் Olga Skabeyev கூறுகையில், "போர் தீவிரமடைந்திருப்பதை பாதுகாப்பாக மூன்றாம் உலகப்போர் என்று அழைக்கலாம். அது மட்டும் உறுதி" என்று கூறினார். அவர் பேசிய வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது.

**இந்தக் கப்பலின் பலம் என்ன?**

பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுப்பைத் தொடங்கிய போது கருங்கடலில் உள்ள பாம்புத் தீவில் இருந்த சிறிய உக்ரைனிய எல்லைப் பாதுகாப்பு வீரர்களை சரணடையுமாறு உத்தரவிட்டது இந்தக் கப்பல்தான். அதற்கு மறுத்து அவர்கள் அனுப்பிய செய்தி பிரபலமாக பேசப்பட்டது நினைவிருக்கலாம்.

சோவியத் யூனியன் காலகட்டத்தில் கட்டப்பட்ட இந்தக் கப்பல் 1980களில் கடற்படைப் பணியில் சேர்ந்தது. உக்ரைனின் தெற்கத்திய நகரமான மைகோலைவ் நகருக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்தது. வழிநடத்தவல்ல ஏவுகணைகளை ஏவும் திறன் படைத்த இந்தக்கப்பல் சிரியாவில் நடந்த மோதலில் ரஷ்யாவால் பயன்படுத்தப்பட்டது. சிரியாவில் இருந்த ரஷ்யப் படையினருக்கு கடல் சார்ந்த பாதுகாப்பை இந்தக் கப்பல் வழங்கி வந்தது. கப்பல்களைத் தாக்கும் வல்கன் ஏவுகணைகள் பதினாறும் நீர் மூழ்கிக் கப்பல்களைத் தாக்கும் ஆயுதங்களும் நீருக்கடியில் வெடிக்கும் ஆயுதங்களும் இந்தக் கப்பலில் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்தக் கப்பலின் எடை 12,490 தொன். உக்ரைன் தாக்குதலில்தான் இது மூழ்கியது என்பது உண்மையாக இருக்குமானால், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு எதிரியின் நடவடிக்கையால் மூழ்கடிக்கப்பட்ட மிகப்பெரிய கப்பலாக இது இருக்கும்.

உக்ரைன் படையெடுப்பு தொடங்கியதில் இருந்து ரஷ்யா பெரிய கப்பல் ஒன்றை இழப்பது இது இரண்டாவது முறை. அசோவ் கடலில் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட உக்ரைனின் பெர்ட்யான்ஸ்க் துறைமுகத்தில் மார்ச் மாதம் உக்ரைன் நடத்திய தாக்குதலில் ரஷ்யக் கப்பலான சாரடோவ் அழிக்கப்பட்டது.

உக்ரைன் - ரஷ்யா போர் மேகங்களுக்கு நடுவே, முன்னோக்கிச் செல்வதற்கான வழியைப் பார்ப்பது கடினமாக இருக்கும்.

**இந்தப் போரின் முடிவு எப்படியிருக்கும் என்பது குறித்த சில சாத்தியங்கள் இருந்தாலும், அதில் பெரும்பாலான முடிவுகள் இருண்டவையாகவே உள்ளன என்று ஜேம்ஸ் லேண்டேல், செய்தியாளர் தெரிவிக்கிறார்.**

**1. குறுகிய போர்**

அழிவுகரமான தாக்குதல்களுடன் ரஷ்யா தனது இராணுவத் தாக்குதல்களை முடுக்கி விட்டுள்ளது. ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்க நேரிடலாம். கீவ் வீழ்ந்து உக்ரைனின் ஜனாதிபதி கொல்லப்படலாம் அல்லது தப்பி ஓடலாம். ரஷ்யா அதன் சார்பிலான பொம்மை ஆட்சியை நிறுவக்கூடும். இது ஒரு நிலையற்ற விளைவு. கிளர்ச்சி மற்றும் எதிர்கால மோதல்களால் பாதிக்கப்படக் கூடியதாக இருக்கும்.

(தொடரும்)

# தேர்தல் செலவினங்களை மட்டுப்படுத்தும் சட்டமூலத்தை உடன் நிறைவேற்றுங்கள்

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துவதற்கான சட்டமூல வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி ஜனாதிபதி.ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது

தேர்தல்முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திருத்தங்கள் தொடர்பில் உங்களால் முன் வைக்கப்பட்ட யோசனைகளில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துகின்ற சட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

எதிர்பார்க்கப்படும் செலவினங்களை மட்டுப்படுத்துதல் தொடர்பில் கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆராயப்பட்டு வருவதுடன் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்களைக் கண்காணிக்கும் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றுக்கிடையிலான கலந்துரையாடல்களுக்கு அமைவாக பல்வேறு வரைபுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் இறுதி வரைபு குறித்து இரு சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எனவே தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் நீங்கள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற விரிவான திருத்தங்களின் ஆரம்பமாக மேற்படி வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதனை நிறை வேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 400 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 280 | 300 | 300 |
| தக்காளி | 350 | 320 | 360 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180 | 200 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 400 |
| கரட் | 350 | 400 | 400 | 450 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 200 | 280 | 200 |
| வாழைக்காய் | 200 | 140 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 480 | 400 | 550 | 500 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 240 | 260 |
| பாகற்காய் | 800 | 600 | 700 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 140 | 200 |
| பயற்றங்காய் | 600 | 700 | 650 | 500 |
| லீக்ஸ் | 280 | 350 | 280 | 350 |
| பீற்றூட் | 260 | 260 | 280 | 300 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 450 | 400 |
| போஞ்சி | 400 | 350 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 120 | 150 |
| தேசிக்காய் | 600 | 650 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 260 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 600 | 400 | -- | 480 |
| முள்ளங்கி | 120 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 80 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 80 | 150 |

# துறைமுக அதிகார சபைக்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால், இலங்கை துறைமுக அதிகார சபையின் புதிய தலைவராக கீத் டி. பேர்னாட் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரற்ற காலநிலை...

களில் 3 ஆயிரத்து 960 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 478 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்களினால் 8 வீடுகள் முழுமையாகவும் 393 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், பாதிக்கப்பட்ட 57 குடும்பங்களைச் சேர்ந்த 237 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தனியார் வைத்...

லாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் மருந்து விற்பனை நிலையங்கள் மீது உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது வவுனியாவில் உள்ள அரச வைத்தியர் ஒருவர் தனது தனியார் வைத்தியசாலையின் பெயரில் போதை மாத்திரைகளை கொள்வனவு செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் எமக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது. குறித்த தகவல் வெளியாகியதை அடுத்து விடுமுறை நாட்களாக இருந்தமையால், தற்போது உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் உணவு மற்றும் மருந்து பரிசோதகர்கள் இணைந்து இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தனியார் வைத்தியசாலை, வைத்தியர் மற்றும் அவரிடம் இருந்து குறித்த போதை மாத்திரைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த போதை மாத்திரை கொள்வனவு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றமையால் வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் இரண்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி விசாரணை செய்ய விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

விசாரணைகள் நிறைவடைந்த பின் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,250)

## ரணிலின் வாக்கு...

படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குறுதியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வரவேற்கும் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகச் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பினூடாக இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வு காண்பது தொடர்பான வேலைத்திட்டம் உடனடியாக நடைபெற வேண்டும். அதை ஜனாதிபதி முன்னெடுக்கின்ற போது எங்களுடைய முழுமையான இணக்கப்பாடும் முழுமையான ஆதரவும் அதற்கு இருக்கும் என்பதே எங்களுடைய உத்தியோகபூர்வ நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த காலப்பகுதியில் எவ்வளவு இணைந்து செயற்பட்டோம் என்பதை அவர் அறிவார். 2016ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்ட காலத்திலிருந்து ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இதற்கான முன்னெடுப்புகள் வழிகாட்டல் குழு எல்லாம் அமைக்கப்பட்டது. அந்த வழிகாட்டல் குழுவிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் நானும் அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றோம்.

புதிய அரசியலமைப்பு தொடர்பான இரண்டு இடைக்கால அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. 2019 ஜனவரி மாதம் இரண்டாவது இடைக்கால அறிக்கையோடு நிபுணர் குழுவினால் வரையப்பட்ட ஒரு முழுமையான அரசியலமைப்பு வரைவு கூட அப்பொழுது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த ஜனாதிபதி தேர்தலிலே ஐக்கிய தேசிய கட்சியின் சார்பாக முன்னின்ற சஜித் பிரேமதாஸவுடைய தேர்தல் அறிக்கையிலே அந்த முயற்சியில் தொடர்ந்து செயற்பட்டு முடிவை எட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டது.

2016ஆம் ஆண்டு அரசியலமைப்பு பேரவையாக உருவாக்கப்பட்டு பல வித கூட்டங்கள் கலந்துரையாடல்கள் மக்கள் சந்திப்புகள் செய்யப்பட்டு மாகாண சபைகளுடைய பிரதிநிதித்துவத்தையும் பெற்று விசேடமாக தென் பதியிலுள்ள ஏழு மாகாண சபைகளை உள்ளடக்கி வேலை செய்யப்பட்டது. அதனடிப்படையில் தொடர்ந்து முன் செல்ல ஜனாதிபதி ஆவணம் செய்ய வேண்டும். கடந்த ஆட்சிக்காலத்திலே இந்த வேலை செய்யப்பட்டது.

இதனை வெகுவிரைவாக தொடர்ந்து முன்னெடுத்தால் ஒரு வருட காலத்திற்குள் இதனை முடிவுக்கு கொண்டு வரலாம். ஒரு வருடம் கூட தேவை இல்லை. அனைவருடைய இணக்கப்பாட்டோடு சகல மக்களுடைய ஆதரவோடு புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட வேண்டும்.

ஜனாதிபதியின் கருத்தை வரவேற்கின்ற நேரத்தில் இதற்கு முன்னர் பங்களித்ததை போலவே முழுமையான பங்களிப்பை கொடுப்போம் என ஜனாதிபதிக்கு சொல்லி வைக்க விரும்புகிறேன் என்றார். (ம-7)

## ஜனா...

சிங்க எதிர்வரும் 28ஆம் திகதி, வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள "பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தின் ஊடாகப் புதிய இயல்புநிலையில் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்" என்ற தலைப்பிலான ஆய்வு மாநாட்டில் கலந்து கொண்டு முதன்மை உரை ஆற்றுவதற்காகவே அவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். (ம-7)

## யாழில்...

சில தினங்களாக மழை பெய்து வருவதனால் யாழின் பெரும்பாலான பாகங்களில் மழை முகில்கள் காணப்பட்டமையால் சூரிய கிரகணத்தை பார்வையிட முடியாத நிலைமை காணப்பட்டுள்ளது.

இருப்பினும் சில பகுதிகளில் சூரியகிரகணத்தை சிறிது நேரம் பார்வையிட முடிந்துள்ளது. (ம-7,18,33,104)

## 6 அத்தியாவசிய...

கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோ பூண்டு 60 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 490 ரூபாயாகும்.

முன்பு ஒரு கிலோ பூண்டு 550 ரூபாயாக இருந்தது. ஒரு கிலோ கோதுமை மா 55 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 375 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கோதுமை மாவின் புதிய விலை 320 ரூபாயாகும்.

275 ரூபாயுக்கு சதொச நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்டு வந்த வெள்ளை சீனி 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 260 ரூபாயாகும்.

ஒரு கிலோ வெள்ளை அரிசி 5 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி இதன் புதிய விலை 169 ரூபாயாகும்.

முன்னதாக, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளை அரிசி 174 ரூபாயுக்கு சதொச நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டது.

1500 ரூபாயாக இருந்த ஒரு கிலோ நெத்திலியின் விலை 50 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1450 ரூபாய் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பருப்பு 30 ரூபாயால் குறைக்கப்பட்டு 285 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7)

தன நிதானய
திகதி - 2022.10.25
சீட்டிழுப்பு இலக்கம் - 949
E 21 46 47 77

மஹஜன சம்பத
திகதி 2022/10/25
சீட்டிழுப்பு இலக்கம் 4919
Y 6 7 2 2 4 1

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 228
மேஷம் 14 26 34 51 மேஷம்

மெகா பவர்
திகதி 25/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1267
O 22 11 51 64 76

கொவிசெத
திகதி 2022.10.25
சீட்டிழுப்பு இலக்கம் 3161
T 28 32 63 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1374
கடகம் 5 8 1 2 0 6

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1894
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.10.25
தினம் செவ்வாய்க்கிழமை
F 03 05 26 68
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,658,180/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.25
சீட்டிழுப்பு இல : 4055
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,271,680/-
10 25 27 34 U

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 240
சீட்டிழுப்பு திகதி 2022.10.25
செவ்வாய்க்கிழமை
05 18 31
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,212,320/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,592,014.80
திகதி 2022-10-25
வெற்றி வாரம் 3606
வர்ணம் சிவப்பு
06 14 54 61 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,394,980/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 30 01 14 55 71
சீட்டிழுப்பு வாரம் 1070
இளஞ்சிவப்பு
2022.10.25 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 272,115,809.80
தொலைபேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1720
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.10.25
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,680,220/-
08 41 62 70 D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13204)

**076 825 7716** (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில்**
**120 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் காபெட் வீதியில்
- தண்ணீர்த்தாங்கி அருகில் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.
- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து 1½km தூரம், மேட்டுநிலம், விவசாயம் செய்வதற்கு, வீடு கட்டுவதற்கு உகந்த நிலம், நல்ல சூழல், நன்னீரூற்று.
- ஒரு பரப்பின் விலை
  முன்பகுதி 200,000/= , பின்பகுதி - 150,000/=

(தரகர் தேவையில்லை,
பார்வையிடும் நேரம் 8.00 am - 5.30 pm) (13254)

தொடர்பு- 077 623 4204,
077 288 0152, 077 076 0389


## அரசாங்கம்...

உள்ளது. அது மட்டுமன்றி போதை வஸ்து கடத்துபவர்களையும் பயன்படுத்துபவர்களையும் இவர்களே ஊக்குவிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

போதைவஸ்து கடத்துபவர்களை பொலிஸார் கைது செய்வதில்லை. எவ்வளவோ போதைவஸ்துக்கள் இங்கே வருது என்றால் அதை தடுக்க வேண்டியது கடற்படையினர் தான் இராணுவம் இதனை தடுக்க முடியும் அவ்வாறு செய்வதில்லை.

இலங்கையில் உள்ள படைகளில் 70% வடக்கு கிழக்கிலே இருக்கிறார்கள். அவ்வாறு இருந்தும் இங்கு வருகிறது என்றால் இங்கே உள்ள இளைஞர்கள், யுவதிகளிடம் இனிமேல் வரும் காலங்களில் இனம்பற்றி நிலம்பற்றி தங்களுடைய இனக்குழுமம் பற்றி சிந்திக்க கூடாது என்பதற்காக இவர்களை கோதுகளாக்குவதற்கு அரசாங்கம் இந்த வேலைகளை செய்கிறது.

இவைதொடர்பில் தாய் தந்தையர்கள், மதபெரியார்கள் விழிப்புணர்வை செய்யவேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளை கவனித்து அவர்கள் நடவடிக்கைகளை அவதானித்து அவர்களை நல்வழிபடுத்த வேண்டும் என்றார். (ம-7)


## Vacancy

Data Entry Operator, Telephone Operator, Counter Staffs, Management Trainee, Receptionist, Marketing Executive (13246)

077 773 3368
074 138 3368



## உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேசரீதியில் இயங்கிவரும் எமது WEC கம்பனியின் கிளை நிறுவனங்களின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**07 விதமான பதவிகளுக்கு 50 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளது.**

முன் அனுபவம், முதலீடு தேவையில்லை
3 மாதகால தகுதி காண் காலத்துடன்
நிரந்தர வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தகுதிகாண் காலத்தில் 20,000/=, 30,000/=, 38,500/= வருமானம் பெறமுடியும்.
பின்னர் அடிப்படைச் சம்பளம் EPF, ETF போன்ற அனைத்து வசதி வாய்ப்பும் பெற்றுக்கொள்ள முடியும்.தரம் 10, O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். (13253)

SMS தொடர்புகளுக்கு :
077 517 9034, 077 985 8580



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் ஒலண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



## அமெரிக்க லொத்தர் இலவச விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-4921)

V2 Travels 0768226240 0768226244



## மணமகன் தேவை

92 புனர்பூசம் 4, 8 செவ்வாய்
19 பாவம் சுவிஸ் சிற்றிசன்,
பொறியியலாளர் மணமகன் படித்த மணமகள் தேவை. (13256)
துர்க்கா திருமண சேவை
077 818 5978
வைபர், வாட்ஸ்அப்
பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை.


## பிரபல ஹெரோ...

யில் நடமாடிய நபர் ஒருவரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்டவர் வேலணை அம்பிகை நகர் பகுதியைச் சேர்ந்த 25 வயது உடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் பிரபல ஹெரோயின் போதை பொருள் வியாபாரி என பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை இன்று ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# நாணய நிதியமே ஒரே நம்பிக்கை


### மத்திய வங்கி ஆளுநர்

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரே நம்பிக்கையாக சர்வதேச நாணயநிதியம் மாத்திரம் காணப்படுகின்றது என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவின் பணிப்பாளர் நாயகம் தனுச ராமநாயக்கவுடனான கலந்துரையாடலின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேசநாணய நிதியத்துடனான பொருளாதார மீட்சி திட்டமே இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரேவழியாக காணப்படுகின்றது என தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் வேறு எவரும் இலங்கையை மீட்பதற்கு உதவ தயாரில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# மறக்கமுடியாத ஓராண்டு நினைவுகளுடன்



தோற்றம்
21 - 11 - 1988

மறைவு
05 - 11 - 2021

## அமரர் விஜயகுமாரன் விஜிதரன்

**திதி : 26.10.2022**

கரவெட்டி மேற்கு ஸ்ரீநாரதா வீதியை பிறப்பிடமாகவும் துன்னாலை கலிகையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் விஜயகுமாரன் விஜிதரனின் முதலாம் ஆண்டு திதிக்கிரியையானது 26.10.2022 புதன்கிழமை இன்று நடைபெற இருப்பதனால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

ஸ்ரீ நாரதா வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (C-5145)

குடும்பத்தினர்
077 193 9820


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில்**
**15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :-
  காலை 8.00 - மாலை 5.30

1 பரப்பின் விலை - 600,000/= (13254)

தொடர்பு- 077 874 8135,
077 408 2649, 076 436 5814



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன்**
**3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை (13252)

தொடர்புகளுக்கு - ஜெயம்
077 986 5457, 077 814 7389


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.